தொழில்

இந்த இதழில்

தலையங்கம் : **பக்கம்**

தொழிலின் அஞ்சலி ... 3

கட்டுரைகள் :

வ. உ. சி. ... 4

தமிழகத் தியாகி வ. உ. சி. ... 5

அந்தக்கால தேசபக்தர்கள் ... 6

பெருந்தகை வ. உ. சி. ... 7

வீரம் விளைத்த வித்தகர் ... 8

எந்தையார் வ. உ. சி. ... 9

உழைப்பும், பிழைப்பும் ... 27

வெளிநாட்டு மூலதனங்களும், நம் நாடும் ... 39

தொடர் நாவல்: (ஆரம்பம்)

இதுதான் காதல்! ... 17

சிறு கதைகள் :

பங்காளிக் காய்ச்சல் ... 23

தன் கையே தனக்கு உதவி ... 30

எது அறிவு? ... 32

கவிதை : வ. உ. சி. க்கு வாழ்த்து ... 35

Telegrams: MARIGOLD MADRAS Phone: 31738

K. PERUMAL UDAYAR

IMPORTER, EXPORTER & MANUFACTURERS' REPRESENTATIVE

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

K. PERUMAL UDAYAR

Scrap Merchant and Iron & Steel Fabrcator,

34, Wall Tax Road, Madras-3.

வ. உ. சிக்கு சென்னை கவர்னர் புகழ் மாலை



தமிழ் நாட்டு மக்கள் பாரம்பர்யமாய் நல்லதோர் கடல் தொடர்பு கொண்டுள்ளனர். பண்டைக் காலத்தில் கூட அவர்கள் இதர நாட்டினர்களுடன் தொடர்பு கொண்டிருந்திருக்கின்றனர். வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்றவர்களின் தேசியச் சாதனைகளை எண்ணும்போது அவற்றை நினைவில் கொள்ள வேண்டியது அவசியமே என உறுதி கொள்கிறேன்.

மந்திரி பி. கக்கன் அவர்களின் வாழ்த்துரை

அன்புடையீர்,

வணக்கம். தாங்கள் தேசபக்தரும், கப்பலோட்டிய தமிழருமாகிய அண்ணல் வ. உ. சிதம்பரனார் அவர்களின் தினத்தையொட்டி, தாங்கள் சிறப்புற நடத்திவரும் தொழில் பத்திரிகையை வ. உ. சி. நினைவு மலராக வெளியிட விருப்பதுகுறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அன்னார் காட்டிய வழி நின்று, மக்கள் அதிக ன்மைகள் பெற "தொழில்" பத்திரிகை தமிழ்நாட்டு மக்களுக்கு வழிகாட்ட பெரிதும் உதவுமென்று நம்புகிறேன்.

தங்கள் முயற்சி வெற்றியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

தங்களன்புள்ள,

P. கக்கன்.

சபா நாயகர் டாக்டர் யு. கிருஷ்ணு ராவ் அவர்களின் வாழ்த்துரை

அன்புடையீர்,

தங்கள் 31.10-58 தேதிய கடிதம் கிடைத்தது. "தொழிலின்" 15.11-58 இதழை வ. உ. சி. நினைவு மலராக வெளியிடத் தாங்கள் தீர்மானம் செய்திருப்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, சிறை சென்று செக்கிழுத்த தியாகி திரு. வ. உ. சிதம்பரனாரின் சேவைகளை மக்கள் நன்கு தெரிந்துகொள்ள இம் மலர் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன். தங்கள் முயற்சி வெற்றியடைய என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள்,

யு. கிருஷ்ணு ராவ்.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 15—11—58	இதழ் 14

தொழிலின் அஞ்சலி

'சுதந்திரம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவேன்!' என்று வட இந்தியாவில் வீரமுழக்கம் செய்தார் லோகமான்ய பால கங்காதர திலகர். அந்நாளில் தமிழகத்தில் தேசியஉணர்ச்சியைத் தட்டி யெழுப்புவாரில்லை. வீரச்சமர் புரியும் ஆற்றல் வீரனுக்குத்தானே உண்டு? பாஞ்சாலங்குரிச்சிப் போரில் முதல் களபலியான தானுதிபதிசுப்ரமணிய பிள்ளை மரபில் உதித்த வ. உ. சிதம்பரம் பிள்ளை தளபதியாகத் தோன்றி தென்னகத்தில் விடுதலைப் போர் முழக்கத்தை ஆரம்பித்தார். அதன் பயனாய் நாடு முற்றும் சுதந்திர உணர்ச்சி பரவியது. முழக்கம் செய்த வ. உ. சி. இன்னல்கள் பலவற்றிற்கு இலக்கானார். தியாகத்தின் சின்னமாக விளங்கி, தமிழ் நாட்டினர்க்கு வழிகாட்டும் ஒளி விளக்காய்ப் பிரகாசித்த வ. உ. சி. அவர்களின் செயலையும், சொல்லையும் எண்ணி அன்னாருக்கு ஆண்டு தோறும் விழா நடத்தி நமது அஞ்சலியைச் செலுத்தவேண்டியது அவசியமேயன்றோ! வீரத்தைப் போற்றவும், வணங்கவும் விருப்பங்கொள்வோர், வ. உ. சி-யை நினைவுகொள்ளாமலிருக்கக் கூடுமா?

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு"
—குறள்.

இந்தத் தெய்வீகத் திருமொழிக்கு நேர் இலக்கான தமிழன்—

அண்ணல் சிதம்பரனாரை மறந்து விடமாட்டான்.

ஆண்டுதோறும் அன்னாரின் நினைவு நாளைக் கொண்டாடவும்—

அன்னாரின் வீர வழியைப் பின்பற்றவும் பின்னடையமாட்டான்.

முதன் மந்திரி காமராஜரின் பெருமுயற்சியால் வ. உ. சி. யின் ஓட்டப்பிடாரத்து இல்லத்தை தேசிய உடமையாக்க (நினைவாலயமாக நிறுவ) ஆவனச்செய்யப்பட்டுள்ளது. அம்முயற்சி அதிவிரைவில் முடிவுற வேண்டும்.

போற்றுவோம் அந்தப்புனிதப் போர்த்தலைவன் நாமம்!

வாழ்த்துவோம் அந்த வள்ளல் பெருமானின் வீரம்!

அஞ்சலி செய்வோம் அந்த அண்ணலின்
திருப்பாதங்கள்!

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி.

கடலாதிக்கத்தில் குறுக்கிட்டால்தான் வெள்ளையர்களின் கொள்ளைப் போக்கைக்குலைக்க முடியுமென்று தீர்மானித்த தீரர் வ. உ. சி. கப்பலோட்டும் தொழிலை ஆரம்பித்தார். ஆம்; அந்தத் தொழிலில் இறங்கிய வ. உ. சி. யைக் கண்டு, ஏகாதிபத்திய இரும்புக்கோட்டையைத் தகர்க்கும் எரிமலையாய் எண்ணி வெருண்டனர் வெள்ளையர். அன்னார் நினைவுநாளில் அஞ்சலிசெலுத்தும்தொழில் அவர் திரு. உருவைத்தாங்கி வெளி வருகிறது.

வ. உ. சி.

[சி. சுப்ரமண்யம்]

சுதந்திரப்பயிர் விளைந்து பலனளிக்கத் தொடங்கிய அருங்காட்சியை 1947லே நாம் அனைவரும் கண்டோம். சுதந்திரப் பயிரைக் காத்து வளர்க்க அரும்பெரும் தியாகங்கள் செய்த வீரத்தலைவர்கள் பலர். அந்த வீரத்தலைவர்கள் வரிசையில் முக்கியமான இடம் பெறுபவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.

மக்களிடையே அறியாமையும், அச்சமும், தன்னலமும், இச்சகம்பேசி வளர்க்கும் இழிந்த மனப்பான்மையும் நிலவியிருந்த காலத்தில் வ. உ. சி அந்தக் கேடுகள் அனைத்தையும் தகர்க்க முற்பட்ட ஒரு பெருவீரராக விளங்கினர்.

தேசபக்தி, தன்னல தியாகம், அஞ்சா நெஞ்சம், தமிழ்ப் பற்று, சொல்வன்மை, செயல்திறம், பெருந்தன்மை, நாட்டுமக்களின் நல்வாழ்வில் அளவற்ற ஈடுபாடு முதலிய பண்பாடுகளில் உயிர் பெற்ற வடிவமாக அவர் விளங்கினர். எல்லா வல்லமையும் வாய்ந்த பிரிட்டிஷ், வல்லரசின் கொடுமையான ஆதிக்கத்தை எதிர்த்து, நியாயத்தின் பால் நின்று போராடிய அவரது மனத்திண்மை, காப்பியத்திலே இடம்பெறத் தக்கதாகும்.

தமிழக வரலாற்றை சற்று பின்னேக்கிப் பார்த்தால் சங்ககாலம் முதற் கொண்டு ராஜராஜன், ராஜேந்திரன் முதலிய ஆற்றல் வாய்ந்த சோழ மன்னர்கள் ஆண்ட பொற்காலம் வரை படைபலம் மிக்க தமிழ் மன்னர்களின் கப்பல்படை பற்றியும், முத்தையும், பட்டையும், மற்றும் பல பொருள்களையும், தமிழ் நாட்டுக் கப்பல்கள் பிறநாடுகளுக்கு ஏற்றிச் சென்றன என்பதையும் படிக்கிறோம். அந்நிய ஆட்சியின் கீழ் மனித உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு அடக்குமுறை தனியாட்சி செய்த நிலையிலும் ஒருமறத்தமிழன் அந்நியருக்குப் போட்டியாக கப்பல் ஓட்டிக் காட்டினன் என்ற புதிய சரித்திரமும், அதே போல தமிழருக்குச் சிறப்பும் பெருமையும் தருவதாகும். சுதேசிக் கப்பல் கம்பெனியைத் துவக்கி, அதை நடத்த முற்பட்டதில் வ. உ. சி. எதிர்நோக்கிய இடையூறுகள்கொஞ்சமல்ல, "கான முயலைக் கொன்ற அம்பைக் கையில் வைத்திருப்பதை விட மதயானையை நோக்கி எறியும்போது குறி தப்பிய வேலை ஏந்தி நிற்பது மேல்" என்று கூறிய வள்ளுவர் மொழி, வ. உ. சி. யின் முயற்சிக்கு நன்கு பொருந்துவதாகும்.

மகாநாடுகள் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றுவதுடன் நாட்டுப் பணியும், பொதுத்தொண்டும் முடிந்து விட்டதாகக் கருதப்பட்ட ஒரு காலம் இருந்து வந்தது, அந்த நிலையை மாற்றி, செயல் திறனைப் பொது வாழ்வில் ஒரு முக்கிய அம்சமாகச் செய்வதில் திலகருடன், வ. உ. சி. சேர்ந்து செய்த தொண்டு மறக்க முடியாததாகும்.

தேசபக்தியின் மாசற்ற திரு உருவான அவர், இமயம் முதல் குமரி வரை நீண்டு கிடந்த நாட்டிற்குச் செய்ய வேண்டிய தொண்டையும், வேங்கடம் முதல் கன்னி வரை இன்பத் தாலாட்டிய தமிழ் மொழிக்குத் தான் ஆற்ற வேண்டிய கடமையையும் நன்கு உணர்ந்தார். இரு கடமைகளையும் ஒன்ருகப் பிணைத்து அவர் ஆற்றிய பணி இன்று நம் அனைவருக்கும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

மதுரை தமிழ்ச் சங்கம் மூலம் தமிழ்ப் பணியாற்றினர். ஏழை மக்கள் நீதி பெற உதவுவதில் தம் வக்கீல் தொழிலைத் திறம்படப் பயன்படுத்தினர். தொழிற் சங்க இயக்கத்தின் காவலனுகப் பணிபுரிந்தார். சைவ சிந்தாந்த சபை, பிரம சங்கம் முதலியவைகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். தொல்காப்பியம் இளம்பூரணம், எழுத்ததிகாரத்தைப் பதிப்பித்தார். திருக்குறளுக்கு விருத்தியுரை, மெய்யறம் முதலிய நூல்களை எழுதினர். விவேகபானு என்னும் மாத வெளியீடு ஒன்றையும் நடத்தினர்.

(5 - ம் பக்கம் பார்க்க)

தமிழகத் தியாகி வ. உ. சி.

ஸ்ரீமதி லூர்தம்மாள் சைமன்

நம் தாய் நாடு சுதந்திரம் பெறுவதற்காகப் போராட்டத் தீயில் குதித்த தியாகிகள் பலர். அவர்களுள் மிகவும் சிறப்பும், பெருமையும் வாய்ந்தவர் நமது வ. உ. சி. அவர்கள், தங்கள் முயற்சிகளின் பலனைக்காண இன்று நம்முடன் இல்லை.

ஒவ்வொரு சுதந்திரப் போராட்டத்திலும் தமிழ் நாடு பின் தங்கிவிடாமல் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது.

1906ம் ஆண்டில் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸில் சுதேசிய — சுயராஜ்ய — பகிஷ்காரக் கொள்கைகள் உறுதியாயின. மிதவாதிகள் அதைக்கண்டு நடுங்கினர். அடுத்த (1907) காங்கிரஸில் அதனை அடியோடு மாற்றிவிட மிதவாதிகள் முயன்றார்கள். அதனை அறிந்து சென்னையிலிருந்து சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதி, சக்கரைச் செட்டியார், துரைசாமி ஐயர் முதலியவர்கள் சூரத் நகரம் சென்று திலகருக்குப் பக்க பலமாக இருந்தார்கள். தமிழகம் திலகரைப் பின்பற்றியது.

வந்தே மாதரமும், சுயராஜ்ய கோஷமும் தூத்துக்குடியில் எட்டிய காலையில் சிதம்பரம் பிள்ளை வக்கீல் தொழிலில் அமர்ந்திருந்தார். நல்ல வருமானம். செல்வாக்கு இவ்விரண்டையும் துறந்து சுயராஜ்ய இயக்கத்தில் குதித்தார். சிதம்பரம் பிள்ளையின் பிரசங்கத்தைக் கேட்ட பின் தூத்துக்குடி மக்களுக்கு உறக்கம் கிடையாது. தமிழ் நாட்டிலே எங்கும் சுதேசிப் பேச்சு. "கப்பலோட்ட வேண்டும், சுதேசிப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். துணி, காகிதம், சோப்பு முதலிய வெல்லாம் சுதேசியாக இருக்கவேண்டும்என்ற எண்ணம் நாட்டில்எல்லோரிடையிலும் பரவத் தொடங்கியது.

சிறந்த தேச பக்தர், தியாகி என்பதுடன் மட்டுமின்றி அவர் தொழிலாளர் தலைவராகவும் விளங்கினர். அறிவின் சிகரமான அவர் அச்சுத் தொழில்வேலையைத் தானே மேற்கொண்டிருந்தார்.

மத்திய சுதந்திரப்போரின் எதிரொலியாக தொழிலாளர்களிடையேயும், பொருளாதாரப் போராட்டம் துவங்கியது. மத்திய மண்ணில் உழைப்பாளிகளின் உரிமைப் போராட்டத்திற்கு ஒத்திகை நடந்தது தூத்துக்குடியில் எனலாம். 1908ல் சிதம்பரனாரின் தலைமையில் நடைபெற்றதூத்துக்குடி "ஹார்வி மில்" வேலை நிறுத்தம் தான் இந்தியாவில் முதன் முதலில் நடைபெற்ற அரசியல் கலப்புடைய வேலை நிறுத்தமாகும்.

தமிழகத்தில் சுதந்திரப் போருக்கு வித்திட்ட பெரியார்களுள் வ. உ. சி. மிகவும் முக்கியமானவர். அவருடைய தன்னலத் தியாகத்திற்காகவும், தளராத தேச பக்திக்காகவும் நாம் அவருக்குத் தலை வணங்குவோமாக. அவருடைய புகழ் மங்காது வளர நம் கடமையைச் செய்வோமாக! வாழ்க வ. உ. சி. யின் திருநாமம்!

தமது வாழ்க்கைச்சரிதத்தை அகவல்பாவில் எழுதிய கவிஞருமாவார். வ. உ. சி யின் வாழ்வு, பெருமை மிக்கதமிழரின் வரலாற்றில் ஒருமுக்கியமான பிணைப்பு ஆகும். திலகர், காந்திஜி, அரவிந்தர் போன்ற தலைவர் வரிசையில் சரியாசனம் பெற்றவர்.

நாம் நமது வருங்காலச் சந்ததியாருக்கு எவ்வளவோ வழிகளில் கடமைப்பட்டிருக்கிறோம், வ. உ. சி. போன்ற பெருமை மிக்க வீரத்தலைவர்களின் அரிய நினைவுகளை என்றும் போற்றும் படியான நிலைமையை ஏற்படுத்தி வைப்பதும், நமது கடமைகளில் முக்கியமான ஒன்றாகும்.

பெரிய லட்சியங்களுக்காக முழுமூச்சுடன் பணியாற்றக் கூடிய பரம்பரை தமிழ் நாட்டில் பெருக வேண்டும். அப்படையைப் பெருகச் செய்வதில் வ. உ. சி. யின் வாழ்வு நமக்கு ஒளிகாட்டும் விண்மீனாய்த் திகழ்கிறது. மாவீரன் நினைவுக்கு அஞ்சலி செலுத்துவோம். அவர் காட்டிச் சென்ற நல் வழியில் நடக்க உறுதி கொள்வோம்.

✻

வீரம் விளைத்த வித்தகர்

ஸ்ரீ. கே. ராஜாராம் நாயுடு

இந்திய சுதந்திர போராட்ட வீரர்களின் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர்களில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் முக்கியமானவராவார். கோழைகளையும் வீரர்களாக்கத்தக்க அன்னாரின் தியாகச் செயல்கள் நம் நாட்டின் வீர வாழ்வுக்கு ஆக்கம் தரும் என்பதில் ஐயமில்லை.

1872-ம் ஆண்டு செப்டம்பர் 6-ம் தேதி தென் பாண்டிப் பகுதியான ஒட்டப்பிடாரத்தில், பெரும் செல்வந்தரான உலகநாதபிள்ளைக்கும், பரமாயி அம்மையாருக்கும் மைந்தனாக அவதரித்தார் நமது பிள்ளை அவர்கள்.

பெற்றோர்களின் உண்மையான மைந்தனாகவே வளர்ந்தார், வாழ்ந்தார். உண்மையான தமிழ்த்தாய் எவரும் வீரமில்லாத தன் பிள்ளையை தன்னுடைய மைந்தனாக ஏற்றுக்கொள்வதில்லை.

'மைந்து' என்றால் தமிழ் சொல்லுக்கு வீரம் என்பது தான் பொருள். வீரத்தை உடையவன் தன்—அதாவது மைந்தை உடையவன் தான்—ஒரு தாயின் உண்மையான மைந்தனாகக் கருதப்பட்டான் அந்தக் காலத்தில்.

வீரமிக்க தாய்க்குலத்தினால்தானே தரணிடோற்றும் வீரத் தனயன்களை ஈன்றெடுக்க முடியும்?

"யானை தாக்கினும் அரவு (பாம்பு) மேற்செலினும்
நீல் (நீல) நிற விசும்பின் வல் ஏறு (இடி) சிலைப்பினும் (இடித்தாலும்)
சூல்மகள் (கர்ப்பஸ்திரி) மாறா மறப்பூண் வாழ்க்கை"
(—பெரும்பாணாற்றுப் படை. *1346*)

துரும்பைக் கண்டாலும் அஞ்சி நடுங்குவது கர்ப்பம் கொண்ட பெண்களின் இயல்பு. ஆனால், வீரத்தாயோ, தான் சூல் கொண்டிருக்கும்போதும், யானையே வந்து தாக்கினாலும், அல்லது நல்ல பாம்பே மேலே ஊர்ந்து சென்றாலும், பயங்கர இடியோசை எழுந்தாலும் கொஞ்சமும் அஞ்சாது—தன் நிலைமாறாது—இருக்கக் கூடியவள்.

இத்தகைய வீரத்தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் புலிக்குட்டிகளாக இல்லாமல் பூனைக்குட்டிகளாகவா போய்விடும்?

சிற்றரசர்கள், பாளையக்காரர்கள் இவர்களுக்கிடையே எழுந்த போரும் பூசலும் அன்னியர்களின் ஆட்சிக்கு இங்கே அடிகோல, அடிமைப்பட்ட நாட்டில் வீரப் பெருமக்கள் தோன்றுவது அரிதாயிற்று.

ஆனால் இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேயர்களே ஆளப்பிறந்தவர்கள் என்ற அடிமைப்புத்தி கொண்ட அப்பாவிகளின் தொகையே நாளுக்கு நாள் பெருகிவந்த அந்தக்காலத்தில் தான் வீர மரபின் பெருமை மங்கிவிடாதிருக்கத் தோன்றினார் வீரர் வ. உ. சிதம்பரம்.

காங்கிரஸ் மகாசபை முதன்முதல் வெள்ளையர்களை எதிர்த்து நேரடி போராட்டத்தை மேற்கொண்டபோது, வடக்கே திலகர் பெருமானும், தெற்கே வீரர் சிதம்பரனாரும் தளபதிகளாக இருந்து தளராது போர் புரிந்தனர்.

தூத்துக்குடியிலிருந்த கோரல் மில் (இப்போது ஹார்வி மில்) தொழிலாளர்களுக்கு தலைமை தாங்கி, வெள்ளை முதலாளிகளின் மூலதனக்கோட்டையாகிய அதை வேலைநிறுத்த ஆயுதத்தால் தகர்த்தெறிந்தார் சிதம்பரனார்.

வேலை நிறுத்த காலத்தில், தொழிலாளர்கள் குடும்பத்தோடு பட்டினி கிடக்க நேர்ந்தது. இதைக் கண்ட சிதம்பரனார் பொது மக்களிடம் நிதி திரட்டி அவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்ததோடு, அவரது முயற்சியால் வேலை நிறுத்தம் செய்திருந்த 2000 தொழிலாளர்களில் 100 தொழிலாளர்களை தூத்துக்குடி நகரமக்களே தற்காலிகமாக வேலைக்கமர்த்திக் கொண்டனர்.

இந்த வேலை நிறுத்த சமயத்தில் ஒரு அருமையான சம்பவம் நிகழ்ந்தது.

தூத்துக் குடியில் வழக்கறிஞர் அரங்கசாமி என்பவர் ஒருநாள் க்ஷவரத் தொழி

(தொடர்ச்சி 36-ம் பக்கம் பார்க்க)

அந்தக்கால தேசபக்தர்கள்

ம. பொ. சிவஞானம்

இந்நாளில், எங்கு நோக்கினும் எவரிடம் பார்ப்பினும் சாதி வெறி ஒன்றையே காணமுடிகிறது. இந்த பயங்கர தொத்து நோய் தேசபக்தபரம்பரையைச் சேர்ந்தவர்களையும் பற்றி விட்டது! அதன் விளைவாக தேசத்துரோக சக்தி வலுப்பெற்று வரக்காண்கிறோம்.

வ். உ. சிதம்பரனார் வாழ்ந்த காலத்தில் தேச பக்தர்கள் எல்லோரும் ஒரே சாதியாக இருந்தனர். ஆளும் சாதி ஒன்று; ஆளுவோரை எதிர்க்கும் சாதி ஒன்று; என இரண்டே சாதிகள் அந்நாளில் இருந்தன. அதனாற்றான் "சாதிமதங்களைப் பாரோம்" என்று முரசு கொட்டினார் பாரதி.

சுப்பிரமணிய பாரதி, சுப்ரமண்ய சிவா, வ. வே. சு. ஐயர் ஆகிய மூவரும் அசல் வேதியர்கள் சிதம்பரம்பிள்ளை பரலி சு. நெல்லையப்பர் ஆகியோர் அப்பட்ட வேளாளர்கள். ஆம்; இதெல்லாம் பிறப்புவழிப் பிரிவினை. ஆனால் அந்த வேதியர்களும் வேளாளர்களும் தங்கள் சாதிகளை மறந்து, அண்ணன் 'தம்பி' களாகவும். மாமன் மச்சான்களாகவும் உறவு கொண்டு வாழ்ந்தனர்.

அவர்கள் காலத்தமிழகத்திலும் 'பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார்' என்ற பூசல் இருந்தது. டாக்டர் நாயர் தலைமையில் "நீதிக் கட்சி" என ஒன்று தோன்றி, வெள்ளையர்களைப் போஷகர்களாகக் கொண்டு சாதி வெறியை வளர்த்து வந்தது. ஆயினும், அந்த சாதி வெறிப்பேய் தேசபக்த வட்டாரத்தை அண்டுவதற்கும் அஞ்சியது. காரணம், அன்றைய தேசபக்தர்கள் பதவிப் பித்துக்கு அப்பாற்பட்டு பத்தரை மாற்றுத் தங்கங்களாக இருந்தனர் என்பதுதான்.

வேளாளரான சிதம்பரனாரைச் சிறையில் வைத்ததற்காக, வெள்ளையனான ஆஷ்துரையைச் சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டான் இளைஞன வேதியன் வாஞ்சு.

சிதம்பரனார் சிறைப்பட்டார்' என்ற செய்தி கேட்டதுமே தாம் செய்து வந்த ஹெட் கான்ஸ்டபிள் வேலையை ராஜினாமா செய்தார் குருசாமி ஐயர் என்பவர்.

'வ. உ. சி. சிறையில் செக்கு இழுக்கிறார்' என்று கேட்டதுமே, சர்வேசா, "நாலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ!" எனக்கடவுளிடம் முறையிட்டுக் கதறி அழுதார் பார்ப்பனரான பாரதி.

இப்படி, அந்தணரல்லாத தேச பக்தர்கள் மீது வைத்த அன்புக்காக, உயிர்த்தியாகம் புரிந்து, உத்தியோகத்தை விட்ட அந்தண தேச பக்தர்கள் இன்னும் எத்தனையோ பேர்!

அதுபோலவே, அந்தண தேசபக்தரிடம் கொண்ட நட்புக்காக அந்தணரல்லாத தேச பக்தர்களும் அரும் பெரும் தியாகங்களைச் செய்திருக்கின்றனர்.

தொழுநோய் பிடித்த சுப்ரமண்ய சிவா என்ற அந்தண நண்பரை, வீட்டில் வைத்து சோறு போட்ட குற்றத்திற்காக ஒரு ஆயுள் சிறைத் தண்டனை பெற்றார் சிதம்பரம்பிள்ளை. இப்படி, தேசபக்தியால் கட்டுண்டு, துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு வாழ்ந்த அந்தணர் அல்லாத தேசபக்தர்கள் ஆயிரம் ஆயிரம்பேர்.

சிதம்பரனார் வைதீக மனம் படைத்த வேளாளர் குலத்தில் பிறந்தவர். அந்த வட்டாரத்திலேயே வாழ்ந்தவர். ஆயினும் இழிந்த சாதியைச் சேர்ந்த ஏழை - எளியவரை எல்லாம் இல்லத்தில்வைத்து உணவளித்து உபசரித்தார். அவரது பத்தினியார் நந்தன் குலத்து அந்தகர் ஒருவருக்கு உணவூட்டி வளர்த்ததாக அவரேகூறுகின்றார். தாழ்ந்த சாதி சகஜானந்தரை தம்பி எனக்கொண்டு, பல்லாண்டுகள் இல்லத்திலேயே வைத்து அவ்வரைத் தமிழ்ப் புலவராக்கினார் வேளாளர் சிதம்பரம்.

சிதம்பரனாரின் நினைவு நாளைக் கொண்டாடும், இத்தருணத்தில் அவருடைய சீரிய பண்புகளை சிந்தையில் கொள்ளவேண்டும். அவ்வரைப் போன்று, சாதிவெறியர்கள் பதவிப்பித்தற்று பணத்தாசையற்று நாட்டு மக்களுக்குப் பணிபுரியும் பண்பாளராக வாழ முயல வேண்டும். இதுவொன்றே வ. உ. சி. க்கு நாம் செய்யும் மரியாதை. சுதந்தரம் பெறுவதற்குப்பட்ட தேசபக்தியைக் கொண்டுதான், அந்த

([illegible]-ம் பக்கம் பார்க்க)

பெருந்தகை வ. உ. சி.

நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் பிரிக்க முடியாதவை. தாகூர் காந்தியடிகள் முதலானவர்களின் வாழ்க்கையில் இதனைக் காணலாம். தாகூர் பெரும் புலவர். நாட்டுத் தொண்டில் சிறிதே ஈடுபட்டவர். காந்தியடிகள் பெரும்புலவர் அல்லர்; ஆனால் நாட்டுத் தொண்டில் பெரிதும் ஈடுபட்டவர். திலகர் பெருமானின் வாழ்க்கையிலோ, பெரும் புலமையும் அமைந்திருந்தது; ஓயாத அரசியல் தொண்டும் இருந்தது. தமிழ் நாட்டில் வ. உ. சிதம்பரம்பிள்ளையின் வாழ்க்கையும் அத்தகையது. நாட்டு விடுதலைக்காக ஓயாது உழைத்தசிறந்த வீரர் அவர். அதே காலத்தில், மொழிப் புலமையும் நிறைந்து உரைநடையிலும் செய்யுளிலும் நூல்கள் இயற்றினார்; பழந்தமிழ் இலக்கியங்களுக்குப் புது விளக்கம் எழுதினார்; தொல்காப்பியத்தின் பழைய உரையைப் போற்றி வெளியிடும் தொண்டும் ஆற்றினார்; ஜேம்ஸ் ஆலன் எழுதிய ஆங்கில நூல் முதலியவற்றை (மனம் போல வாழ்வு, அகமே புறம் என்னும் பெயர்களில்) மொழிபெயர்த்து எழுதியும் உள்ளார். மற்றொரு சிறப்பும் அவருடைய வாழ்க்கையில் அமைந்திருந்தது. அதாவது: மெய்யுணர்வு நூல்களைக் கற்று நல்ல தெளிவும் பெற்றிருந்தார். கண்ணனூர் சிறைச்சாலையில் இருந்தபோது அவர் இயற்றிய நூறுவெண்பாக்கள் கொண்ட 'மெய்யறிவு' என்ற நூல் இதற்குச் சான்றாகும்.

அந்த நூலில் மக்கள் விதி விதி என்று கண்மூடித் தன்மையால் பேசிக் கெடுவதைக் கண்டித்துரைத்துள்ளார். அவ்வாறு விதிவிதி என்று வீணாகத் துன்பத்தில் ஆழ்ந்து கிடப்பவர் பெரிய பேதைகள் என்கிறார்.

விதிவிதி என்று ஆழ்கின்றார்
வீணாகத் துன்பில்
விதிவிதிக்கத் தம்மையன்றி வேறு
பதி ஒருவன்
உண்டென்று நம்பி ஒருசிலர் இங்கு
அன்னாரின்
கண்டறியேன் பேதையரைக்
காண்.

மு. வரதராசன்

இவ்வாறே சாதி வேறுபாட்டால் செய்யப்படும் கொடுமைகளையும், சமய வேறுபாட்டால் செய்யப்படும் கொடுமைகளையும் வன்மையாகக் கடிந்துள்ளார்.

இத்தகைய அருமையான கருத்துக்களைக் கொண்ட வெண்பாக்களைப் பாடிய இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவராகச் சிறப்புப் பெற்றதில் வியப்பில்லை. "ஊழை வெல்வதற்கு உபாயம்" "முத்திக்கு மார்க்கம்" "வலிமைக்கு மார்க்கம்" என்னும் பெயரால் சில நூல்கள் எழுதியுள்ளார் வ. உ. சி. நூலாசிரியராக விளங்கிய இவர் "மனம் போல வாழ்வு" என்ற மொழிபெயர்ப்பு நூலை உரிமையாக்கியபோது, 'தேசத்திற்கு உழைப்பவர்க்குச் சமர்ப்பணம்" என்று தேசபக்தர்க்கு உரிமையாக்கியுள்ளார். இதுவே அவருடைய தேசபக்தியை எடுத்துக் காட்டுகிறது. கப்பல் ஓட்டிய காரணத்தால் ஆங்கிலேயர்க்குப் பெரும் பகையானார். அக்காலத்தில் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி கம்பெனியார்என்ற அவருடைய போட்டி முயற்சியைத் தவிர்ப்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் தருவதாகக் கூறினர். ஆனால் வ. உ. சி. யின் உறுதியான நெஞ்சு, அந்தத் தொகையைப் பொருட்படுத்தவில்லை. நாட்டின் நன்மையே அவருடைய நெஞ்சில் மேலோங்கி நின்றது. சுதேசிப் பொருள்களையே வாங்கி நாட்டுத் தொழிலைப் போற்றுதல் வேண்டும் என்ற கடமையுணர்ச்சியிலும் அவர் உயர்ந்த எல்லையில் நின்றார். அந்நிய நாட்டுக் கத்தியால் சிரைத்துக் கொள்ள மறுத்தவர் அவர். அவருடைய வாழ்வில், சிறு சிறு செயல் முதல் சிறை சென்ற நிகழ்ச்சிகள் வரையில் எல்லாம் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் நிறைந்த பெருந்தகவையே புலப்படுத்துகின்றன.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்தரத்தைக் காப்பாற்ற முடியும். நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்படக் காரணமாக இருந்தது சாதி-சமய வழிப்பட்ட பிரிவு மனப்பான்மைகளே. அவற்றை பொதுவாழ்விலிருந்து அகற்றப் பாடுபட்டனர் வ. உ. சிதம்பரனார் போன்ற அக்காலத் தலைவர்கள்.

அவர்கள் அடிச் சுவட்டைப்பின்பற்றி, நாமும் தூய தேசபக்தி ஒன்றையே மனதில் கொண்டு மக்களுக்குப் பணி புரிவோமாக.

எந்தையார் வ. உ. சி.

[வ. உ. சி. சுப்பிரமணியம்]

''வானம் பொழியுது-பூமி விளையுது
மன்னவன் காணிக்கு கிஸ்து ஏது?''

என்று முழங்கி வெள்ளைக் கும்பினியாரோடு அருஞ்சமர் செய்து தூக்கு மேடையில் வீரன் கட்டபொம்மன் உயிர் துறந்தது 1799-ல். ''சிப்பாய்க் கலகம்'' என்று வெள்ளையரால் வருணிக்கப்பட்ட முதல் சுதந்திரப் போராட்டம் நடந்தது, 1857-ல். இதற்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு பாஞ்சாலங்குறிச்சி—தமிழ் நாடு முதல் விடுதலைப்போரைத் தொடங்கியது என்பது இன்று அநேகருக்கு நினைப்பிருக்காது. கட்டபொம்மன் அரசவையில் தானுதிபதியாக இருந்து முதல் களபலியானவர் சுப்பிரமணிய பிள்ளை. அந்த வீர மரபில் உதித்தவர் எந்தையார் வ. உ. சிதம்பரம் பிள்ளை. கட்டபொம்மனின் ஆட்சித் தலைநகராக இலங்கியது ஒட்டப்பிடாரம். பாஞ்சை மன்னர்களை வெள்ளையர்கள் ஒடுக்கி அடக்கியபின் பாஞ்சாலங்குறிச்சி பாழாயிற்று; ஒட்டப் பிடாரம் ஒளி இழந்தது; ஆனால் உயிர் இழக்கவில்லை!

நெல்லை மாவட்டத்தில் ஒரு சிற்றூர் ஒட்டப்பிடாரம்; வ. உ. சி. பிறந்த ஊர். வ. உ. சி. யின் தந்தையார் வ. உலகநாத பிள்ளை எட்டையபுரம் சமஸ்தான வழக்கறிஞர். அவரது தந்தை வள்ளிநாயகம்பிள்ளையும் வழக்கறிஞர். அக்காலத்தில் தமிழிலேயே நீதி மன்றங்கள் நிகழ்ந்தன. வழக்கு உரைத்தலும் தமிழில்தான் நடந்தது. வழக்கறிஞர் பரம்பரையில் உலகநாதபிள்ளைக்கும், பரமாயி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார் சிதம்பரம். 1872-ம் ஆண்டு செப்டம்பர் 5-ந் தேதி அஸ்த நட்சத்திரத்தில் வ. உ. சி. பிறந்தார்.

பிறந்த ஊரிலும் பின்பு திருநெல்வேலி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பள்ளியிலும், அடுத்து தூத்துக்குடி சேவியர் உயர் நிலைப் பள்ளியிலும் பயின்று மெட்ரிக்குலேஷன் தேறினார் எந்தையார்.

மேல் படிப்பில் எந்தையார் அதிக நாட்டம் காட்டாததால் சிறிது காலம் ஒட்டப்பிடாரம் தாலூகா அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணிபுரிய நேரிட்டது. இயற்கையிலேயே சுயேச்சை உள்ளம் படைத்தவரான வ. உ. சி., ஒருவருக்கு உள்பட்டு நடக்கும் அவ்வேலையை உதறித் தள்ளினார்.

தம் மகனை வழக்குரைக்கும் தொழிலில் ஈடுபடுத்த எம் தாத்தா அவர்கள் ஆர்வம் கொண்டனர். எனவே திருச்சியில் அப்போதிருந்த சட்டக் கல்லூரியில் படிக்க வ. உ. சி. திருச்சி சென்றார். சட்டப்படிப்பில் சிறப்புப் பெற்றுத் தேறினார் சிதம்பரம். அப்போது அவருக்கு வயது 23.

வழக்கறிஞர்

ஊர் திரும்பிய வ. உ. சி. ஒட்டப்பிடாரத்தில் வழக்கு உரைக்கும் தொழில் தொடங்கினார். ஏழை எளியவருக்காக இலவசமாக வாதாடினார். போலீஸாரின் பொய் வழக்குகளை யெல்லாம் தகர்த்துவிடுவார். தாவா, தண்டம் (சிவில், கிரிமினல்) ஆகிய இரு துறைகளிலும் அவர் ஈடுபட்ட போதிலும் தண்ட வழக்குகளிலேயே பெயரும், புகழும் எய்தினார். வ. உ. சி. யின் வழக்காடும் திறனுக்குப் பல சான்றுகள் கூறலாம்; ஆனால் பெருகும். இங்கு ஒரு நிகழ்ச்சியை மட்டும் கூறுவேன்.

* * *

நீதிமன்றத்தின் உள்ளும், புறமும் எள்ளுப் போட்டால் எண்ணெய் வழியும்பெருங் கூட்டம். வாதி பக்கத்து வழக்கறிஞரும், பிரதிவாதி சார்பில் ஆஜரானவரும் நெருப்புப்பொறி பறக்க ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுகின்றனர். ஆம்! ஒரு தரப்பில் வ.உ.சி. யும், மறுதரப்பில் அவர் தந்தையும்தோன்றி வழக்கிட்டதே பெரும் கூட்டத்துக்குக் காரணம். நீதிபதிக்குக் கூட வியப்பு. வழக்கு முடிந்ததும் வ. உ. சி. க்கும் அவர் தந்தைக்கும் பிணக்கு ஏற்பட்டே தீரும் என அனைவரும் நம்பினர். இறுதியில் வெற்றி எம் தந்தைக்கே; அவர் தந்தை கட்சி

தோற்றது. தந்தையும், மகனும் பிரியநேரிடுமே என அனைவரும் கலங்கி நிற்கையில், வெற்றிகண்ட தம் மகனைத்தழுவிப் பெருமகிழ்ச்சியடைந்தார் எம் தாத்தா. 'இவன் தந்தை என்நோற்றான் கொல்' என்ற சொல்லுக்கு இலக்காகிய தந்தையின் மகிழ்ச்சிக்கு எல்லை உண்டா?

வ. உ. சி. யின் வழக்காடும் திறனுக்கு சொந்த ஊர் நீதிமன்றம் சிறிதாயிருந்தமையாலும், நண்பர்கள் பலர் அழைத்தமையாலும் அவர் 1900-ல் தூத்துக்குடியில் குடியேறித் தொழில் புரியலானார். தூத்துக்குடி ஒரு துறைமுகப் பட்டினம்; வாணிபத்தலம். எனவே வ. உ. சி.க்கு பெரும் வருவாயும் புகழும் கிட்டின.

தேசபக்தர்

1905-ல்வங்காளம் பிரிவினை செய்யப்பட்டதை அடுத்து நாடு முழுவதிலும் பெருங் கிளர்ச்சியும, கொந்தளிப்பும் ஏற்பட்டன. மக்கள் விடுதலை வேட்கை கொண்டனர். வங்காளத்தில் விபின சந்திரபாலரும், மகாராஷ்டிரத்தில் திலகரும் தென்னாட்டில் சிதம்பரம்பிள்ளையும் மக்களின் விடுதலைவேட்கையை ஊக்கி வந்தனர். ஒருசமயம வ.உ.சி. சென்னைக்கு வந்தபோது அபேதானந்தர், ராமகிருஷ்ணனந்தர் என்ற துறவிகளின் தொடர்பு ஏற்பட்டது. உயிருக்கு விடுதலை மோட்சம்; உடலுக்கு விடுதலை தேச சுதந்திரம் என அவர்கள் உபதேசித்த மொழிகள் இளைஞராக இருந்த வ. உ. சி. யின் மனதில் விடுதலைக்கனலை மூட்டிற்று. உள் நாட்டுப்பொருட்களையே ஆதரிக்கும் சுதேசிய இயக்கத்தைத் தமிழ் நாட்டில்தோற்றுவிப்பதில் முனைந்தார். அந்நியப் பொருட்கள் வெறுப்பு அந்நாளில் காட்டுத்தீ போல் நாட்டில் பரவியது. ஊர் திரும்பிய சிதம்பரம் தூத்துக்குடியில் தருமசங்கம் என்ற பெயரில் கைநெசவுச்சாலையும், சுதேசிப் பண்டகசாலையும் நிறுவினார். மக்களுக்கு உழைப்பும் ஊதியமும்நல்கியது தருமசங்கம். நாட்டுப் பற்றும், விடுதலை வேட்கையும் ஊட்டியதுசுதேசிப்பண்டகசாலை. தூத்துக்குடி, தென்னாட்டுபாரிஸ்ரல் என்று பெரும் புகழ் பெற்றது. பொதுக்கூட்டம் கூட்டி மக்களிடையே சொற்பொழிவாற்றி அவர்களுக்கு ஊக்கம் ஊட்டியவகையில் தமிழ்நாட்டில் மேடைக்கலைப்பரவக் காரணமாயிருந்தவர் வ. உ. சி. தாம். சிச் சங்கங்கள் கண்டதுடன் நின்றுவிடவில்லை; ஊர் ஊராகச் சென்று சொன்மாரி

யும் பெருக்கி வந்தார் சிதம்பரனார். அந்நாளில் தலை சிறந்த பேச்சாளர்களின் முதன்மையாக விளங்கியவர் வ. உ. சி. என்றால் மிகையல்ல.

கப்பலோட்டிய தமிழன்

அந்நாளில் வெள்ளையரே கடலாதிக்கம் கொண்டிருந்தனர். தூத்துக்குடியில் உள்நாட்டு வணிகர்களிடம் வெள்ளைக் கம்பெனி பெரும் கட்டணம் வாங்கியதுடன் அவர்களை மதிப்புக்குறைவாகவும் நடத்தியது. வெள்ளை வியாபாரிகளுக்கு விசேஷ சலுகைகள். இதனைச் செவியுற்ற சிதம்பரனார் சிந்தையில் சீற்றம் பிறந்தது. கவி பாரதியார் பாடியது போல, "பொழுதெலாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ? நாங்கள் சாகவோ" என்று முழங்கினார். வெள்ளையருக்குப் போட்டியாகக் கப்பல் கழகம் நிறுவ வேண்டுமென்ற பித்து பிள்ளையின் மனதில் வேரூன்றியது. கப்பலோட்டிக் கடாரத்தை வென்ற தமிழ்நாட்டில் ரோமாபுரிக்கு முத்தும் பவளமும் அனுப்பிய தமிழகத்தில் கிழக்கே காம்போஜம், சாவகம் முதல் மேற்கில் மிசிரம் (எகிப்து) ரோமாபுரி வரை கடலாண்ட தமிழ் நாட்டில் தமிழ் வணிகர்களுக்கு அந்நியர் அவமானம் இழைப்பதைத் தமிழ் மகன் எவன்தான் பொறுப்பான்? தவிர, கடலாட்சி அந்நியர் வசமிருக்கும் வரை, நாடாட்சி நம் கைக்கு மீள்வதும் கடினம் என்ற முடிவுக்கும் வந்தார் வ.உ.சி. தென்னாட்டு வியாபாரிகள், செல்வந்தர்கள், பொதுமக்கள் ஆதரவுடன் 1905-ல் சுதேசிக்கப்பல் கழகம் நிறுவப்பெற்றது. பங்குக்கு பத்து ரூபாய் வீதம் பத்து லட்சம் ரூபாய் திரட்டத் திட்டமிட்டார் எந்தையார். அந்நாளில் இப்பெருந்தொகை ஈட்டுவது எவ்வளவு கடினம் என்று சொல்லாமலே விளங்கும். எனினும் எடுத்த முயற்சியில் முனைந்து நின்று கிட்டிய சில லட்ச ரூபாய்களுடன் 1906 அக்டோபர் 16-ந் தேதி கப்பல் கழகம் பதிவு செய்யப்பெற்றது. தமிழ் மக்கள் களிபேருவகை கொண்டனர். முதலில் 'சூசான்' என்ற ஒரு கப்பலை வாடகைக்கு அமர்த்தினர். ஆனால் விழிப்புற்ற வெள்ளைக்கப்பல் கம்பெனியார் சூசான் கப்பல் தலைவனை நயவஞ்சமாகத் தம் பக்கம் வளைத்துக் கொண்டனர். மலை கலங்கினும் நிலை கலங்காதவரான வ. உ. சி. சொந்தத்தில் கப்பல்கள் வாங்க பம்பாய் சென்றார். அங்கு திலகர் பெருமானின் பெரும் நட்பு கிடைத்தது. கப்பல் வாங்க விடாமல் அங்கும் போய் வெள்ளையர் விஷமம் செய்தனர். 'கப்பலோடு தமிழகம் வருவேன், இல்லையெனில் கடலில் மிதப்பேன்' என்று சூள் உரைத்த சிதம்பரனார் இடுக்கண்கள் அனைத்தையும் களைந்து இரு கப்பல்களுடன் தூத்துக்குடி திரும்பினார். "எஸ். எஸ். காலியோ", "எஸ். எஸ். லாவோ" என்பன அவை. அக்கப்பல்கள் தூத்துங்குடி வந்து சேர்ந்த நாளை அந்நகர மக்கள் ஒரு திருநாளாகவே கொண்டாடி மகிழ்ந்தனர்.

வெற்றி வாகை சூடி கடல் வேந்தாக வ. உ. சி. வந்தது கண்ட வெள்ளைக் கம்பெனியார் கலங்கி நின்றனர். கப்பல் கட்டணங்களைக் குறைத்தனர். வ. உ. சி. யும் சளைக்கவில்லை. போட்டி வலுத்தது. சுதேசிக் கப்பல்களில் வாணிபப்பண்டங்களுக்கு மட்டுமே கட்டணம்; ஆட்கள் இலவசமாகப் போய் வரலாம் என்ற நிலைகூட ஏற்பட்டது. போட்டியிட்டு வெல்ல முடியாதெனக் கண்ட வெள்ளைக்காரக் கம்பெனி நயவஞ்சக வேலைகளில் இறங்கியது. சுதேசிக்கப்பல் கழகத்திலிருந்து வ. உ. சி. விலகி விடுவதாக இருந்தால் பெருத்தொகை ஈடுதருவதாக ஒரு தூதர் மூலம் சொல்லி யனுப்பினர் கயவர். வந்தவர் வெகுண்டோட வெஞ்சினங் கொண்டார் வ. உ. சி. பெற்ற பிள்ளையாகிய கப்பல் கழகத்தை மாற்றானுக்குக் காட்டிக் கொடுப்பதா! மறத்தமிழன் மறந்தும் செய்வானா துரோகம்?

சுதேசி நாவாய் நிலையத்தில் ஊழியம் புரிந்தவர்களுக்கு ஊதியம் அதிகம் கொடுத்துக்கவர வெள்ளையர் முயன்றதும் பலிக்காமற் போயிற்று. இறுதியாக அரசாங்கத்தின் துணைகொண்டு கப்பலோட்டிய தமிழனை அடக்க நினைத்துச் சதித்திட்டம் வகுத்தனர். வெள்ளை ஆட்சி துள்ளிக் குதித்து உதவிக்கு வந்தது. விடுதலை வீரரை விட்டு வைக்கவா இந்திய ஆட்சி விரும்பும்?

வெள்ளையன் வ. உ. சி. மீது கொண்ட வெஞ்சினத்தை பின்வரும் கவிதைகள் மூலம் படம் பிடித்துக் காட்டுகிறார் பாரதியார்.

வெள்ளைக்கார விஞ்ச்துரை கூற்று

1. நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை
   நாட்டினாய்—கனல்—மூட்டினாய்
   வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
   மாட்டுவேன்—வலி—காட்டுவேன். (நாட்டி)
2. கூட்டங் கூடிவந் தேமா தரமென்று
   கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்

ஒட்டம் நாங்க ளெடுக்க வென்றே கப்பல்
ஓட்டினய்—பொருள்—ஈட்டினய். (நாட்டி)

3. கோழைப்பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினய்—சட்டம்—மீறினய்
ஏழைப் பட்டிங்கு இறத்தல் இழிவென்றே
ஏசினய்—வீரம்—பேசினய். (நாட்டி)

4. அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினய்—புன்மை—போக்கினய்
மிடிமை போதும் நமக்கென்றிருந்தோரை
மீட்டினய்—ஆசை—ஊட்டினய். (நாட்டி)

5. தொண்டொன்றே தொழிலாக்கொண்டிருந்தோ
தூண்டினய்—புகழ்—வேண்டினய் [ரைத்
கண்ட கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினய்—சோர்வை—யோட்டினய். (நாட்டி)

6. எங்கு மிந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினய்—விதை—தூவினய்
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறு முயல்
செய்யவோ—நீங்கள்—உய்யவோ? (நாட்டி)

7. சுட்டு வீழ்த்தியே புத்தி வருந்திடச்
சொல்லுவேன்—குத்திக்—கொல்லுவேன்
தட்டிப்பேசுவோ ருண்டோ!—சிறைக்குள்ளே
தள்ளுவேன்—பழி கொள்ளுவேன். (நாட்டி)

—பாரதி

தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை மறுமொழி

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி—அஞ்சிடோம்;
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம்—பார்க்குமோ?
வந்தேமாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்—முடி தாழ்த்துவோம்:
எந்தம் ஆருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ? —அவ—மானமோ?
பொழுதெல்லாம் எங்கள் செல்வங்கொள்ளை கொண்டு
போகவோ?—நாங்கள்—சாகவோ?
அழுது கொண்டிருப் போமோ? ஆண்பிள்ளை
அல்லவோ—உயிர்—வெல்லமோ?
நாங்கள் முப்பதுகோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச்—சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ இது
நீதமோ?—பிடி—வாதமோ?
பாரதத் திடை அன்பு செலுத்துதல்
பாபமோ?—மனஸ்—தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ?—இதிற்—செற்றமோ?
ஒற்றுமைவழி யொன்றே வழியென்பது
ஓர்ந்திட்டோம்:—நன்கு—தேர்ந்திட்டோம்;
மற்றும் நீங்கள் செய்யுங்கொடு மைக்கெலாம்
மலைவு றோம்—சித்தம்—கலைவுறோம்
சதையைத் துண்டுதுண் டாக்கினும் என்னெண்ணம்
சாயுமோ?—ஜீவன்—ஓயுமோ?
இதையத் துள்ளே இலங்கு மகாபக்தி
ஏகுமோ:—நெஞ்சம்—வேகுமோ?

—(பாரதி)

வெள்ளையர் வெளியேறினர்

வ. உ. சி. அவரது நண்பர்கள் சுப்பிர மணியசிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோரது பேச்சுக்களால் நாட்டில்குழப்பம்விளையுமென ஆங்கில ஆட்சியாளர் அவர்கள் மீதுநெல்லை மாவட்டக் கலெக்டர் முன்பு ஒரு ஜாமீன் வழக்குத் தொடுத்தனர். இதனல் தூத்துக் குடி மக்கள் ஆத்திரம் கொண்டனர். ஆலைத் தொழிலாளரிடமும் கொந்தளிப்பு ஏற்பட் டது. வெள்ளை வியாபாரிகளும், ஆலை அதி காரிகளும் பகலில் ஊருக்குள் வருவதும், உயி ருக்குப் பயந்து இரவில் அருகிலுள்ள முயல் தீவிலும், கடலில் நிற்கும் கப்பல்களிலும் தங்கிக் காலம் கழிக்க நேரிட்ட தென்றல் மக்கள் ஆத்திரத்தின் உச்சநிலையை அறி ந்து கொள்ளலாம். வெள்ளையர் முதலில் வெளி யேறியது இக்காலத்தில் (1908) தான் என்பது வரலாறு கண்ட உண்மை. ஜாமீன் வழக்கு தோற்றது. ஆட்சியாளர் அப் போதைக்கு செயலற்றுப் போயினர்.

வழக்கம்போல ஊர் ஊராகச் சுதந்திர முழக்கம் செய்து வந்தனர் சிதம்பரனரும் சிவாவும்.

தொழிலாளர் தலைவர்

இதற்கிடையில் அப்போது 'கோரல் மில்' என்றழைக்கப்பட்ட 'ஹார்வி' பஞ்சாலை யில் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக் கும் பிணக்கு ஏற்பட்டது. காலையில் கதி ரோன் தோன்றும் முன் ஆலை சென்று மாலை யில் இருட்டியபின் வீடு திரும்பிய பாட்டாளி யின் வேலை நேரத்தை நீட்ட ஆலையாளர் முய ற்சியே பிணக்குக்குக் காரணம் என்று சொல் லப்பட்டது. தகராறு முற்றவே வேலை நிறுத் தம் ஏற்பட்டது. தொழிலாளர்களின் உரி மைப் போராட்டம் தளர்ந்து விடும் போலத் தோன்றிய தருணத்தில் வ. உ. சி. வந்து தலைமை தாங்கினர், ஊரில் பண்டமும் பொருளும் வசூலித்தும், தம் மனையாளின் நகைகளை விற்றும் கூடப் பாட்டாளிகள் பட் டினி கிடக்காமல் காத்தார் வள்ளல் வ.உ.சி. வேறு வழியின்றி வெள்ளை ஆலை முதலாளி

கள் பணிந்தனர். பாட்டாளிகள் எட்டு மணி நேர வேலை பெற்றனர். இந்தியாவிலேயே முதலில் வெற்றி கண்ட பெரிய வேலை நிறுத்தம் இதுவே எனத் தொழிற்சங்க இயக்கத்தினர் இன்றும் போற்றுகின்றனர்.

சுதேசிக் கப்பல் கழகம் போட்டியைச் சமாளித்து நன்ருகவே நடந்து வந்தது. கடலாதிக்கத்தை மட்டுமின்றி, ஆலை ஆதிக்கத்தையும் குலைத்த வ. உ. சி. அந்நியரின் நாடாளுகையையும் நலியச் செய்துவிடு விடுவார் என்று கண்டனர் வெள்ளை ஆட்சியாளர்; தருணம் பார்த்துக் காத்திருந்தனர்.

இரட்டை ஆயுள் தண்டனை

1908-ம் ஆண்டு மார்ச் 9-ந்தேதி வங்க வீரர் விபின சந்திரபாலர் விடுதலை நாள். அன்று திருநெல்வேலி ஆற்றுப்படுகையில் மாபெருங் கூட்டம். அரசினர் தடையையும் மீறி சிதம்பரமும், சிவாவும் சுதந்திர முழக்கஞ் செய்தனர். மக்கள் வீறு கொண்டனர்.

காத்திருந்த ஆட்சியாளருக்கு வாய்ப்புக் கிடைத்தது. வ. உ. சி. சிவா இருவரது பேச்சிலும் அரச நிந்தனை இருந்ததாகக் கூறி ராஜத்துரோக வழக்குப் போட்டனர். கொதிப்படைந்த மக்கள் தூத்துக்குடியிலும், நெல்லையிலும் கலகம் செய்தனர். பெரும் சொத்துச் சேதம் ஏற்பட்டது. மக்கள் எழுச்சி ஒடுக்கப்பட்டது.

வ. உ. சி. மீதுள்ள வழக்கு நெல்லை ஜில்லாவில் மட்டுமல்ல; தமிழ் நாட்டில்மட்டுமல்ல; காஷ்மீரம் முதல் கன்னியா குமரி வரை, போர்பந்தர் முதல் பாரிஸால் வரை, நாடு முழுவதிலும் பெரியதொரு விழிப்பையும், எழுச்சியையும் ஏற்படுத்தியது. வழக்கு விசாரணைக்கென்றே ஸ்ரீ ஏ. எப். பின்ஹே தனி நீதிபதியாக வெள்ளை ஆட்சியால் நியமிக்கப்பட்டார். வழக்கு நான்கு மாத காலம் நடந்தது. வ. உ. சி. யும் சிவாவும் கொடுத்த வாக்கு மூலங்கள் நாட்டில் விடுதலைச் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படத்தக்கன. அரச நிந்தனையாகப் பேசியதாக சிவாவுக்கு ஒரு ஆயுள் தண்டனையும், சிவாவுக்கு இடம் கொடுத்ததற்கும், ராஜ நிந்தனைக்குமாகச் சிதம்பரனுருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டன. கொலைக் குற்றவாளிகளுக்குக்கூட ஒற்றை ஆயுள் தண்டனை விதிப்பதே வழக்கம். இந்தக் கொடிய இரட்

வ. உ. சி. கலைக்கூடம்

(சென்னை அரசினர் உதவிப்பெற்று)

★

தலைவர்களின் சிலைகள்

பொம்மைகள்

சிறந்த வர்ண ஓவியங்கள்

சினிமா ஜோடனைகள்

முதலிய கலைப் படைப்புக்களுக்கு

சிறந்த தோர்

கலைக் கோயில்

விரைவில் திறக்கப்படும்

உரிமையாளர் :

R. T. கிருஷ்ணமூர்த்தி

★

அணுகுக :

வ. உ. சி. கலைக்கூடம்

பூந்தோட்டம்.

35/60, சந்நிதி தெரு, வடபழநி,

சென்னை.

டை ஆயுள் தண்டனையைக் கேட்டு நாடு முழுவதும் கொதித்தது. அக்காலத்தில் இந்தியா மந்திரியாக இருந்த ஜான் மார்லியையும் இத்தண்டனை கலக்கியது. ஆனால் இக்கொடும் தண்டனை விதித்த, பினஹே துரை பின்பு தம் வேலையை விட்டே லண்டன் திரும்பினார். அவரது அநியாய தண்டனையைக் கண்டு இந்திய மந்திரி வெறுப்பு அடைந்ததே அவர் நாடு திரும்பக் காரணமென்று பின்னால் தெரிய வந்தது.

அநியாயத் தீர்ப்பை மாற்றுமாறு உயர் நீதிமன்றத்தில் பிள்ளை, சிவா இருவர் சார்பிலும் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது. வழக்காடுவதற்காக பொருளுதவி நாடி வ. உ. சி. யின் மனைவியார் விடுத்தவேண்டுகோளுக்கிணங்க தேச முழுவதிலிருந்தும் இலங்கை, தென் ஆப்பிரிக்கா, மலேயா போன்ற கடல் கடந்த நாடுகளிலிருந்தும் பொருளுதவி கிடைத்தது. அப்போது தென் ஆப்ரிக்காவிலிருந்த மகாத்மா காந்தி பிள்ளையவர்கள் வழக்குக்காக நிதி திரட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது. வழக்கில் வ. உ. சி. சார்பில் சேலம் தந்த பெரும்வழக்கறிஞர் ஸ்ரீ. சி. விஜயராகவாச்சாரியார் முதலியோர் நியாயம் வாதித்தனர். இறுதியில் இரட்டை ஆயுள் தண்டனை ஆறுண்டுக் கடுங்காவலாகக் குறைந்தது. தம் சிறைத் தண்டனையைச் சிதம்பரனார் முதலில் கோயம்புத்தூர் மத்திய சிறையிலும் பின்னர் கண்ணனூர் சிறையிலும் கழித்தார்.

சிறைவாசம்

சிறையில் கல்லுடைத்தல் முதற் கொண்டு செக்கிழுத்தல் வரை பலவிதக் கொடுமைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார் வ. உ. சி. அவர் செய்த தவறு தாய் நாட்டிடம் கொண்ட தணியாதபேரன்பு தான். கொடிய சிறையையும் கல்விக் கோயிலாக மாற்றிக் கொண்டார் வ. உ. சி. சிறையிலிருக்கையில் பல அரிய நூல்களைப் படித்தார்; இயற்றினார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் முற்பட்டார் வ. உ. சி. யின் தவ வாழ்க்கை தமிழ் அன்னையின் பெரும் பேறாக வாய்த்தது என்றால் அது தமிழ் நாட்டின் தவப்பயன்தான்.

அக்காலத்தில் சிறையில் கைதிகள் பட்ட இன்னல்கள் கல்லையும் கரையவைக்கும். சிறை அதிகாரிகளின் கொடுங்கோன்மையால் ஒரு சமயம் சிறையில் கலகம் மூண்டது. சில கைதிகள் போலீஸார் சுட்டதில் உயிரிழந்தனர். இதன் விளைவாக இந்தி

S. அப்துல் சுபஹான் சாயபு

இரும்பு வியாபாரம்

(அரசாங்க அங்கீகாரம் பெற்ற பேப்ரிகேட்டர்)

RGED. NO. 13

தெற்கு ராஜ வீதி, : : புதுக்கோட்டை.

உயர்ந்த ரக தண்ணீர் வைக்கும் குடங்கள், பட்டண வாழிகள், கடகால், இறைவை சால்கள், முட்டி சால்கள், ஏந்த சட்டிகள், பால் அடுப்புகள், ரம்ப தூள் அடுப்புகள், வடை சட்டிகள், தோசைகல், வண்டி பார் கம்பிகள், ஏர் கொழுவு, முத்திரையிட்ட பட்டணம் படி செட்டுகள், படிக்கல் செட்டுகள், மாட்டு சங்கிலிகள், நெல் அவிக்கும் அண்டாக்கள் இவைகள் யாவும் சிறந்த முறையில் உற்பத்தி செய்கிறோம். குறித்த நேரத்தில் ஆர்டர்களுக்கு சப்ளை செய்து தருகிறோம்.

உரிமையாளர் :

S. அப்துல் சுபஹான் சாயபு.

யாவிலேயே முதல் சிறைச் சீர்திருத்தக் குழு ஏற்பட்டது. குழுவின் முன்பு வ.உ.சி. அளித்த சாட்சியம் இன்றும் போற்றற் குரியது. பின்பு கைதிகள் நிலையும் திருந் தியது.

கிட்டத்தட்ட ஐந்தாண்டுக்காலம் கொடும் சிறை வாழ்ந்து நாட்டுக்குப் பட்ட கடனைற்றி 1912, டிசம்பர் மாதம் விடுதலை அடைந்தார் வீரர் வ. உ. சி. ஆனால் நாடு விடுதலை அடையாதது கண்டு வருந்தினார்.

விடுதலைக்குப் பின்

சிறைத்தவம் முடித்து மீண்ட வ. உ. சி. யை சிறைவாயிலில் அவர் தம் அருமைநண் பர் கண்ணனூர் திரு. கணபதிப்பிள்ளையும், சுப்பிரமணிய சிவமும் வரவேற்றனர். திரு. கணபதிப்பிள்ளையின் இல்லத்தில் தம் மனை யாளையும், மக்களையும், மைத்துனரையும் பல ஆண்டுகட்குப் பின்பு கண்டு களிப்புற்றுச் சின்னாள் அங்கு தங்கி யிருந்தார் சிதம் பரனார்.

சிறையிருந்த காலை தமக்கு உறு துணை யாக விளங்கிய கோவை வழக்கறிஞர் சிவ நேசச் செல்வர் சிவக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் குடும்பத்துடன் கோவை சென் றார். வ. உ. சி. கோவைக்கு அண்மையி லுள்ள திருப்பேரூர்த் தலத்தில் சில காலம் தங்கியிருந்தார். அப்போது, ஒரு பாங்கியில் அலுவலராகப் பணி புரிந்தார். ஆம், நாட் டுக்குப் பட்ட கடனை அடைத்தாயிற்று; வீட் டுக் கடனை ஆற்றவே பாங்கில் பணி! அரச நிந்தனைக்காகத் தண்டனை யடைந்தவராத லின், வ. உ. சி. யின் வக்கீல் ‘சன்னதை’ அந்நிய அரசாங்கம் பறித்துவிட்டது. சிறை யினின்றும் கூடவந்த வறுமையை விரட்ட வும், குடும்பத்தில் விளக்கேற்றவும் குற்றேவ லாயினும் புரியத் தயங்கினாரில்லை வ. உ. சி. அங்கும் இடுக்கண்கள் வந்துற்றன; ஆனால் அவற்றை எள்ளி நகையாடியிருந்தார் சிதம்ப ரம். சென்னை அழைத்தது; கோவை விடை கொடுத்தது. சென்னை வந்து திருமயிலை, சிந் தாதிரிப்பேட்டை, பெரம்பூர் போன்ற பகுதி களில் வாழ்ந்தார். இக்காலத்தில் தான் அவர் அரிசி, நெய் முதலிய வியாபாரம் செய்து குடும்பம் நடத்த வேண்டியதாயிற்று. வழக்காடியதொரு காலம்; வாணிபம் நடத் தியதொரு காலம். ஆம், இரண்டும் வாழ்க் கையின் இரு கண்ணாடிகள். தமிழ்நாடு தன் தலைவரை உணரத் தவறியதன் விளைவு. வல் லரசையும் எதிர்த்து நின்ற வ. உ. சி. யை வறுமை வாட்டியது.

தேச பக்தன் என்றும் தேச பக்தனா கவே இருப்பான் என்பதொரு பிரெஞ்சு மூதுரை. அதற்கொப்ப வறுமை வாட்டியும் நாட்டுப்பணி காட்டத்தை விட்டிலர் வ. உ. சி. பெரம்பூரில் இருந்த காலை யிற்றான் தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனாருடன் சேர்ந்து பஞ்சாலைத் தொழிலாளருக்குச் சங்கம் கண்டார். தபால்ஊழியர் சங்கத்தின் தந்தையும்எந்தையே. பெரம்பூரில் அவர் நிறு விய தபால் ஊழியர் சங்கம் தான் நாட்டில் இன்று மிகப் பழமையான தபால் தொழிற் சங்கங்களில் ஒன்று எனக் கூறப்படுகின் றது. பொருட் செல்வம் போதியவாறு கிட்ட வில்லை யெனினும், சென்னைப் பட்டினத்தில் நட்புச் செல்வத்தாலும், தமிழ் அறிஞர் தோழமையாலும் கோமானாகவே விளங்கினார் வ. உ. சி. தமிழ்ப் பேராசிரியர் திருமணம் செல்வக் கேசவராய முதலியார், பூவைக் கலி யாணசுந்தர முதலியார், ராவ்பகதூர் வையா புரி பிள்ளை, வ. ரா. போன்றவர்கள் அன்பு கெழுமிய நண்பராயினர். தில்லைத் துறவி சக ஜானந்தரும் சென்னையிலேயே சிதம்பனாரைத் தரிசித்து திருக்குறள் முதலிய தமிழ் நூல் கள் கற்றார்.

“ஆனைப் பசிக்குச் சோளப்பொரி!” என்றவாறு, வள்ளலாகவும், கோமானாகவும் வாழ்ந்த வ.உ சி.க்குவாணிப வருவாய்போத வில்லை. சிறையில் தாம் எழுதிய தமிழ் நூல் கள் பலவற்றை அச்சேற்றும் செலவு வேறு. இங்கிலையில் உற்ற நண்பர் சிலர் உதவியு டன், வழக்கறிஞர் விருதை மீண்டும் பெற முயன்றார். ஆனால் விரைவில் அது கிட்டுவ தாயில்லை. இதற்குள் குடும்ப நிகழ்ச்சிகள் சொந்த ஊருக்கு அவரை அழைத்தன. மீண்டும் ஒட்டப்பிடாரம் சென்று வீடடைந் தார்; வேளாண்மையில் ஈடுபட்டார். ‘செய் யும் தொழிலிற் சிறப்புமில்லை; சிறுமையு மில்லை’ என்பதற்கு வழக்கறிஞராகவும், வணிகராகவும், உழவராகவும் உழைத்தின் பம் கண்ட வ. உ. சி. யின் வாழ்க்கையே சான்று.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வாலேசு என்னும் துரைமகனார் வ. உ. சி. யின் வீர வாழ்க்கைபற்றி அறிந்து வ.உ.சி. வழக்கறிஞர் தொழில் நடத்தத் தடையில்லை என்று ஆணை பிறப்பிக்க மீண்டும் வழக் கறிஞரானார் வன்சிறை வென்ற வ. உ. சி.

Phone : 3619

Star Steel Trunk Works,

★

MANUFACTURERS OF

Star of India Steel
Cabin & Suit Cases

305, N. S. C. B. Road,
MADRAS-1

★

OFFICE :

84, Mint Street, Madras-3

★

ஸ்டீல் டிரங்க், சூட்கேஸ், பிலிம் ரேக்குகள், பாக்ஸ்கள் கேபின் ரகங்கள், விவசாயக் கருவிகள், பக்கட்டுகள், பில்டிங் சாமான்கள் ஆர்டர் பேரில் தயாரித்துத் தரப்படும்.

PROPRIETOR :

H. A. கான்,

அப்போது ஒட்டப்பிடாரம் தாலூகாவின் ஆட்சித் தலைமைநகராயிருந்தகோவில் பட்டியில் குடும்பத்துடன் குடியேறி அங்கிருந்த நீதிமன்றங்களில் வழக்குரைக்கும்பணி புரிந்தார் வ. உ. சி. நீதிமன்றங்களில் மீண்டும் கேட்டது வ. உ. சி. யின் குரல். ஏழை எளியவர்க்கும், இல்லாதவர்க்கும் இன்தமிழ்ச் செல்வர்களுக்கும் வ. உ. சி. ஒரு சடையப்ப வள்ளலானார். அநியாயமாகத் தொடரப்பெற்ற வழக்குகளில் கைம்மாறு எதுமின்றித் தோன்றி நியாயம் தேடித் தந்தார் நிரபராதிகளுக்கு. இக்காலத்தில் தான் தேசபக்தர்கள் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர், ந. சோமயாஜுலு முதலியோர் மீதிருந்த அரச நிந்தனை வழக்கில் அவர்கள் சார்பில் வழக்காடினார். அப்போது ஸ்ரீ காமராஜ் கோவில் பட்டியில் நீண்ட நாள் எங்கள் வீட்டில் தங்கியிருந்ததும் உண்டு..

1932-ம் ஆண்டு ஆரம்பத்தில் உதவிக் கலெக்டர் தலைமையிடம் கோவில்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு மாறவே, வ.உ.சி. மீண்டும் தூத்துக்குடியில் வாழ்க்கை தொடங்கினார். இளமையில் வீரவிளையாட்டுகள் ஆடிய திருமந்திர நகருக்குத் திரும்பியது வ. உ. சி. க்கிப் பெரும் மகிழ்ச்சிஅளித்தது. ஆனால் நீண்ட சிறை வர்ழ்க்கையும், ஓயாத உழைப்பும் இப்போது அவரை வாட்ட ஆரம்பிக்கவே வழக்குரைக்கும் தொழிலைக் குறைத்துக் கொண்டு, அமைதியாகத் தமிழ்தாய்த் தொண்டில் ஈடுபட்டார். இந்த ஆண்டு செப்டம்பரில் அவரது நெருங்கிய நண்பர்கள் சிலர் தூண்டுதல் காரணமாக அறுபதாண்டுக் கொண்டாட்டம் நடைபெற்றது. சிறையிலேயே தொடங்கிய—திறக்குறளுக்கு உரைகாணும் பணி தீவிரமாக நடைபெற்றது. முப்பாலுக்கும் வ.உ.சி. விருத்தியுரை உருவாகியது. 1934ல் திருச்செந்தூர் திருமுகப்பெருமான் திருமுன்பு கூட்டப்பெற்ற புலவர் பேரவையில் விருத்தியுரை அரங்கேற்றப் பெற்றது. உரையை விரைவில் அச்சேற்றும் வேலை தூத்துக்குடியில் நடந்து வந்தது. நாடோறும் வ. உ. சி. யின் இல்லத்தில் மாலைநேரத்தில் இலக்கிய விருந்து நடைபெறும். வள்ளுவர் வருவார்; கம்பர் கவிபாடுவார், மெய் கண்ட தேவ நாயனார் சிவஞான போதம் செய்வார். இறுதியில் இளைஞர்கள் சிதம்பரனாரின் சிறுபிராயத் தீரச் செயல்கள் பற்றித் திறந்த வாய் மூடாது கேட்டு வியப்புறுவர். 'தமிழன்', 'தமிழ்'என்றுசொல்லிக்கொண்டு

(தொடர்ச்சி 33-ம் பக்கம் பார்க்க)

அறிமுகம்

'இதுதான் காதல்'-இது ஓர் குணச்சித்திரம். வாழ்க்கையிலே—குறிப்பாக அநேகக் குடும்பங்களில் நடக்கக் கூடிய போராட்ட நிகழ்ச்சிகளையும், உள்ளத்தை நெகிழச் செய்யும் சம்பவங்களையும் அழகிய தமிழில் பின்னியிருக்கிறார் இக்கதாசிரியர். காதலுக்குக் குறுக்கு சுவராய் நிற்கிறது ஜாதி. காதல் என்பதென்ன வென்பதை புரிந்து கொள்ளாத நிலையில் தப்பபிப்பிராயம் கொள்ளுவோர்க்கு தெளிவுரையாகிறது இக்கதை.

காதல் என்பது கண்ணெதிரே தென்படும் பருகும் நீர்தானா? அல்லது கண்ணையும் மனத்தையும் ஏய்க்கும் கானல் நீர்தானா? என்ற ஐயப்பாட்டைத் தெளிவுப் படுத்தும் இவ்வற்புதக் கதை, வாசகர்களின் பாராட்டுதலைப் பெறும் என்பது எமது துணிபு.

முழு நீளக்கதையொன்றை முதன் முதலில் தீட்டிச் சமர்ப்பிக்கும், 'திருமகனுக்கு' எமது பாராட்டு. ஆ—ர்.

— 1 —

பெற்றோரின் குழப்பமும், பெண்ணின் கலக்கமும்

லலிதா பி. ஏ.

அவள் படிப்பை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்து ஆறுமாத காலமாகியது. வயது வந்தப் பெண் ஆனதால் திருமண பிரச்னையும் வெழுந்தது. திருமணமென்றாலே ஏதேனும் போராட்டம் ஏற்படாதிருக்காதல்லவா? தாய் தந்தையருக்குள் தகராறு. உற்றாரும், உறவினரும் பெண்வீடு நோக்கிப் படையெடுத்தனர். அழ்கி; நாகரிகக் காரி; படித்துப் பட்டம் பெற்றவள். அவளைத் தட்டிக் கொண்டு போக எத்தனையோ சீமான்கள் முயன்று கொண்டிருந்தனர். வரும் வரன்களை யெல்லாம் தாய் தட்டிக் கழித்துக் கொண்டே வந்தாள். லலிதாவின் தகப்பனார் மாப்பிள்ளை தேடும் பொறுப்பிலே கண்ணுங் கருத்துமாயிருந்தார். லலிதா தாய்க்குச் செல்வப் பெண்! செல்வ மகளுக்குச் சீராய் மணமுடித்துப் பார்க்கத்தான் தாய் தவிப்பாள். ஆனால் இவ்ள் அப்படியில்லையே! அவள் மனநிலை யாருக்குத் தெரியும்?

சுந்தரம் சர்க்கார் காரியாலயத்தில் தலைமை குமாஸ்தாவாய் சேவை செய்து ஓய்வு பெற்றவர். கிடைக்கும் பென்ஷன் பணத்தை வைத்துக் கொண்டு சிக்கனமாக வாழ்க்கை நடத்தி வந்தார். தன் மகளுக்கு நல்ல வரனைப் பார்த்து மணம் முடித்து வைத்துவிட வேண்டுமென்பது அவர் ஆவல். படிப்பு பட்டம், நாகரிகம், நளினம் இவைகளில் சிறந்தப் பெண்ணுக்குத் தகுதியான வரன் கிடைப்பதென்பது லேசான காரியமா?

சுந்தரம் தன் மகளுக்கு மங்கல விளக்கு ஏற்ற வேண்டுமென்று வார்த்தையெடுத்தாலே போதும், ஒரே போராட்டம் தான். வாய்ச் சண்டையிலிருந்து கைச் சண்டை வரை முற்றிவிடும். லலிதாவின் தகப்பனார் வீட்டிலே கல்யாணப் பேச்செடுப்பதை விட்டார். வெளியில் பார்வையைச் செலுத்தி காரியத்தை முடிப்பதில் முனைந்தார். இப்படியே நாட்கள் கழிவதில் அவர்வெறுப் படைந்தார். உள் பூசலை ஒரு

விதமாய் முடித்துவிடவேண்டு மென்று தீர்மானித்தார்.

"நம் பெண்ணுக்கு திருமணம் வேண்டாமென்று தட்டிக் கழித்துக்கொண்டே போனுல் என்ன ஆகிறது? அவளை கன்னி மாடத்தில் விடவேண்டுமா? அவள் படித்தப் பெண். இந்தக் காலத்துப் பெண்களின் போக்கே நாகரிகத்தின் பேரால் எப்படியெப்படி யெல்லாமோ இருந்து வருகிறது. உலக நிந்தனைக்கு இடம் கொடுத்து விட்டால் நமது குடும்ப கௌரவம் என்ன வாகும்? இந்தச் சுந்தரம் தெருவில் நடந்து செல்லவே முடியாதே! சுசீலா! யோசித்துப் பார்! காலாகாலத்தில் அவள் மண வாழ்க்கை யேற்று சுகமாய் வாழட்டும்! நீ யேன் அவள் கல்யாண விவகாரத்தில் குறுக்கிட்டு தடை செய்கிருய்? அவள் சுகமாய் வாழ்வதில்தான் நமது சிறப்பு இருக்கிறது, யோசித்துப்பார் சுசிலா" என்ருர் சுந்தரம் தன் மனைவியிடம். அவர் பேச்சிலே நயம் பிரதிபலித்தது.

அப்போது லலிதாவும் அங்கே இருந்தாள். தாய் என்ன சொல்வாளோ என்பதை யறிய வேண்டுமென்பது அவள் ஆவல். தன் பார்வையை வேறு திசையில் செலுத்தியிருந்தாள். எனினும் மனம் மாத்திரம் அங்கே நடக்கும் பேச்சை கவனிப்பதில் ஈடுபட்டிருந்தது. சுந்தரத்தின் பேச்சு லலிதாவின் தாய்க்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போல் இருந்தது.

"என்னங்க! லலிதா டாக்டருக்குப் படிக்க வேண்டுமென்று ஆர்வப்படுகிருள். அவளுடன் படித்த சிநேகிதிகளும் பல துறைகளில் உத்தியோகம் செய்கிருர்களாம். நம்ம குடும்பத்திற்கு ஒரே ஒரு குழந்தை. அவள் மனம்போல் படித்து முடிக்கட்டுமே! இன்னும் சில வருஷம் இருந்து கலியாணம் செய்து கொடுத்தால் போகுது! ஒரு பெண்ணின் விருப்பமில்லாத காரியத்தில் நாம் குறுக்கிடுவது சரியல்ல. லலிதாவும் உங்கள் போக்கைக் கண்டு எப்படி தன் அபிப்பிராயத்தைச் சொல்வது என்று பயப்படுகிருள். அவளைச் சமாதானம் செய்ய எனக்குத்தானு அவ்வளவு அக்கறை? எனக்குத்தானு லலிதா மகள்? உங்களுக்கு மகள் இல்லையா? பெண்ணுய்ப் பிறந்து விட்டால் எதற்கும் கொடுத்து வைக்கவேண்டும். தாய் வீட்டில் சுகம் அனுபவிக்க முடியாமல் இந்தப் பாவி வயிற்றில் ஏன்தான் பிறந்தாளோ" என்று நெஞ்சு அடைக்க விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள் சுசிலா அம்மாள்.

அவள் அழுவதைப் பார்த்ததும் சுந்தரத்தின் கண்களில்கூட நீர் மல்கி விட்டது. இருப்பினும் நல்ல சம்பத்துடன் வரும் மாப்பிள்ளைகளை தட்டிக் கழித்துவிட்டால் மறுபடியும் கூடிவருவது குதிரைக் கொம்பாகப் போய் விடுமே யென்ற கஷ்டம் அவருக்கு! கடைசியில் சுந்தரம் அப்படி மாறிவிடுவார் என்று மனைவி எதிர்பார்க்கவில்லை. லலிதாவும் கனவு கண்டிருக்கமாட்டாள்.

"லலிதா! உன் முடிவை முன்னமேயே சொல்லி இருக்கக் கூடாதா? இத்தனை நாட்களையும் வீணுய்த்தானே கழித்தாய்? நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விட்டாயே! வருகிற ரீ ஓபனிங் பீரியடில் உன்னை மெடிகல் காலேஜில் சேர்த்து விடுகிறேன். இப்போது சந்தோஷம் தானே! ஆனுல் நீ டாக்டராகி சம்பாதிக்கும் காலத்தில் உன் வருமானத்தை சேவிங்ஸ் செய்து வைத்துக் கொள். உன் அம்மாவுக்கு ஒரு நயாபைசாவும் கொடுக்காதே" என்று மனைவியைப் பார்த்தவாறே கிண்டலாகப் பேசினுர் சுந்தரம்.

மகளின் திருமணம் சீக்கிரம் நடைபெறுமல் தடைப்பட்டுவிட்டதால் இறுமாந்தாள் தாய். தாயின் உள்ளத்தை லலிதா இன்னும் சரிவர புரிந்து கொள்ளவில்லை. சுந்தரத்தாலும் தெரிந்துகொள்ள முடியவில்லை. லலிதா, தனக்காக தன் தாய் பரிந்து பேசுகிருள் என்று எண்ணினுளே தவிர, அவள் மனத்தில் என்ன இருக்கிறதென்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. லலிதாவின் மனம் என்ற கிணற்றிலே 'முடிவு' என்ற ஏதோ ஓர் பொருள் மூழ்கித்தான் கிடந்தது.

சுசிலாவுக்கு உடன் பிறந்த சகோதரன் சிவகுமார். லலிதாவை அவனுக்குதிருமணம் செய்துவிடவேண்டு மென்பதுதான் அவள் கட்டியுள்ள மனக்கோட்டை. அவள் எண்ணத்திற்கு மாருக சுந்தரமும் சிவகுமாரனும் எலியும் பூனையுமாகத்தான் இருந்தார்கள். பல சமயங்களில் தன் தம்பிக்காக வக்காலத்து வாங்கியும் பேசுவாள் சுசிலா. குடிகாரனுய் இருந்தாலும் தன் மகள் அவனிடம் தான் வாழவேண்டுமென்ற எண்ணங் கொண்டவள். அவள் தன் மகளின் நல் வாழ்வைப்பற்றி சிந்தித்ததாய்த் தெரிய

வில்லை. சகோதர வாஞ்சை அவளை ஒரே வழியில் திருப்பிவிட்டது.

நாகரிக குளத்தில் மூழ்கி எழுந்தவளான லலிதா, கல்வி வாசனையற்ற மாமனை மணக்க எப்படி மனம் ஒப்புவாள்? சுசீலா, தம்பியை உயர்த்திப் பேசாத நாளில்லை. லலிதா சாதாரணப் பெண்ணல்லவே! பட்டதாரியாயிற்றே! எத்தனையோ டிப்டாப்பான மைனர்களை ஓரக் கண்களால் பார்த்து உதறித் தள்ளிவிட்டவள் அவள். எழிலான தன் வதனத்தைக்கொண்டு எண்ணற்ற இளங்காளைகளின் உள்ளத்தில் மண்ணை வாரிப் போட்டிருக்கிறாள் என்றால், அவள் தாய் மாமன் எம்மாத்திரம்? தாயின் கருத்தை அவள் புரிந்துக்கொள்ளாதது தான் லலிதாவின் பிற்போக்கான குணம். கற்றவர்களிடத்திலே கள்ள எண்ணம் ஏற்படுவது அரிதேயன்றோ!

* * * *

மாதங்கள் பல உருண்டோடின. சுந்தரம் மாடிக் கூடத்தில் உலாவிக்கொண்டிருந்தார்.

"பூம்!......பூம்!......" என்று வீட்டின் முன்னே காரின் ஹாரன் சப்தம் கேட்டது. எங்கேயோ சென்றிருந்த சுந்தரத்தின் கவனம் ஹாரன் வந்த திசையை நோக்கித் திரும்பியது. காரிலிருந்து சரஸ்வதி மில் உரிமையாளர் தனுஷ்கோடி படையாச்சி இறங்கிக்கொண்டிருந்தார். சுந்தரம் அவர் வருகையைக் கண்டு திகைத்து விட்டார். மாடியைவிட்டு கீழே இறங்கிவந்து தனுஷ்கோடியை வரவேற்று வீட்டினுள் அழைத்துச் சென்றார் சுந்தரம்.

அலங்கார மேடைபோல் காட்சி தந்த மாடிக் கூடத்திலே நாற்காலியொன்றில் அமர்த்தப்பட்டார் தனுஷ்கோடிபடையாச்சி. அடுத்த விநாடியே குளிர்ந்த பானமும், சூடான காப்பியும் மேஜையின் மேல் வைக்கப்பட்டன. சுந்தரம் தன் மகளைக் கூப்பிட்டார். அவளும் வந்தாள். "ஐயா தர்னம்மா சரஸ்வதி மில்லின் உரிமையாளர்! ரொம்ப தயாள குணம் படைத்தவர்; பொருளில் பெருத்துள்ளதுபோலவே வாரி வழங்கும் வள்ளல் தன்மையிலும் பெருத்தவர்" என்று லலிதாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அறிமுகப் படலம் முடிந்ததும் "லலிதா!

CITY LIGHT BRAND STEEL TRUNK WORKS

Manufacturers of Steel Trunks
& Consumer Goods

339, Esplanade, Madras-1.

ஸ்டீல் ட்ரங், சூட்கேஸ், கேபின் ரகங்கள், பிலிம்பாக்ஸ்கள், பிலிம் ரேக்குகள், வாளிகள், விவசாயக் கருவிகள், பக்கட்டுகள், பில்டிங் சாமான்கள் குறித்த காலத்தில் ஆர்டர் பேரில் தயாரித்து கொடுக்கப்படும்.

Sole Proprietors:

K. Kannabiran Mudaliar,
K. Radhakrishna Mudaliar.

"காப்பியைக் கொடு" என்று உத்தரவு மிட்டார்.

முன்பின் அறியாத அந்த மனிதரைப் பார்த்து "வணக்கம் ஐயா" என்று லலிதா தன் இரு கைகளையும் தூக்கி மரியாதை செலுத்தினாள். லலிதா மேஜைமீது இருந்த தட்டை எடுத்து நீட்டினாள் தனுஷ்கோடியிடம். எதை எடுத்து சாப்பிடுவது என்று புரியாமல் தனுஷ்கோடி திகைத்துக் கொண்டு மெதுவாக குளிர்ந்த பானம் உள்ள கிளாஸை எடுத்து வாயில் வைத்தார்.

"ஸார்! உங்கள் திடீர் விஜயம் எங்களைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. ஒரு வார்த்தை சொல்லி அனுப்பி யிருந்தால் நானே வந்திருப்பேனே!" என்று பேச்சைத் துவக்கினார் சுந்தரம்.

"சுந்தரம்! நல்ல செய்தியைச் சொல்லவே தான் நானே நேரில் வந்துள்ளேன். நம் மில்லின் மானேஜர் திடீரென்று தனது உத்தியோகத்தை ராஜினாமா செய்து விட்டார். அந்தப் பொறுப்பிற்கு தகுதி வாய்ந்த ஒருவரை புதியதாக நியமனம் செய்யவேண்டியதாய் இருக்கிறது. ஒழுக்கத்தின் சிகரமாய் விளங்கும் உங்கள் கவனம் என் உள்ளத்தில் பிரதிபலித்தது. அந்தப் பொறுப்பை ஏற்று நடத்தும் திறமை உங்களிடம் இருக்கிறது என்பது என் தீர்மானம். உங்கள் விருப்பத்தை யறிந்து அதற்கான ஏற்பாட்டைச் செய்கிறேன்" என்றார் தனுஷ்கோடி படையாச்சி.

தனுஷ்கோடி படையாச்சியின் வாயிலிருந்து இந்தச் செய்தி வரும் என்று எதிர்பார்க்கவில்லை சுந்தரம்! தனக்கு எதிர்பாராத வகையில் பெரிய உத்தியோகம் கிடைக்கப் பெற்றதால் சுந்தரம் அடைந்த ஆனந்தத்தை சொல்லவேண்டிய தில்லை.

"என்னங்க யோசனைப் பண்றீங்க? அவங்க மனசு நோகாமே சம்மதங் கொடுத்து அனுப்புங்க" என்று அறையின்மறைப்பில் நின்று பார்த்துக்கொண்டிருந்த சுந்தரத்தின் மனைவியின் குரல் எதிரொலித்தது.

சுந்தரம் "சரிங்க" என்ற சொல்லில் சம்மதத்தைத் தெரிவிக்கவே, "நாளை நான் உங்கள் வரவை எதிர்பார்க்கிறேன்" என்று தனுஷ்கோடி படையாச்சி சொல்லி விடை பெற்றுச் சென்றார்.

"லலிதா நீ ரொம்ப அதிர்ஷ்ட சாலி! நல்ல காலம் நம்மை தேடிவந்து விட்டது. உன் கல்யாணத்தை சிறப்பாய் நடத்த வேண்டுமே, பணம் போதாதே யென்றெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். அந்தக் கவலைக்கு இனி இடமில்லை. கடன் கேட்டாலும் தாராளமாய்த் தருவார்கள். மில் மானேஜரில்லையா? உன் திருமணத்தை முடிவு செய்கிறவரைஓடியாடி நீ ஆனந்தமாய் பொழுதைப் போக்கிக்கொண்டிருக்கலாம்" என்றார் சுந்தரம்.

"திருமணத்தைப்பற்றி முடிவு செய்ய என்ன விருக்கிறது? மாப்பிள்ளை நம்ம கையிலே இருக்கச்சே; வேறு மாப்பிள்ளையா தேடவேண்டும்?" என்றாள் சுசிலா.

சுசிலாவின் வார்த்தை அவர்கள் இருவரையும் தூக்கி வாரிப் போட்டு விட்டது. யார் என்றே புரியாமல் விழித்தார்கள் லலிதாவும், சுந்தரமும்.

"யார் அந்த மாப்பிள்ளை சுசீலா?" என்றார் சுந்தரம்.

"என் தம்பி சிவ குமார் தான்" என்றாள் சுசிலா.

"அது தானே முடியாது சுசிலா"

"ஏன்...? அவனுக்கென்ன குறைச்சல்...? அவன் நொண்டியா? முடமா? அழகுக்குத் தான் குறைவா?" என்றாள் சுசீலா.

"இல்லை என்று எந்த முட்டாள் சொல்ல வந்தான்? அழ்கான அந்தக் குடிகார கழுதைக்கு கொடுப்பதை விட ஒரு குட்டிச் சுவரையாவது கட்டிக்கொள்ளும்படி தள்ளி விடலாமே! ஏன்? உன் மகள் சந்தோஷமாய் வாழக் கூடாது என்ற எண்ணமா உனக்கு?" என்றார் பெருத்த குரலில் சுந்தரம்.

"இல்லை, லலிதா சிவகுமாரனுக்குத் தான்வாழ்க்கைப் படவேண்டும்! வேறொருவனுக்கு என் மகளைக் கொடுக்க ஒரு காலும் சம்மதிக்க மாட்டேன்" என்று அழுத்தம் திருத்தமாக அடித்துப் பேசினாள் சுசிலா.

"சுசீலா! நீ காண்பது வீண் சொர்ப்பனம். வேலை வெட்டி இல்லாமல் ஊரை சுற்றி வந்து தண்டச்சோறு தின்பவனுக்கு ஒரு கௌரவமான மனிதனின் பெண்ணை கட்டிக் கொள்ள என்னடி தகுதியிருக்கிறது? தம்

டிக் கேட்க உன் தாய் தகப்பனுக்கும் தகுதியில்லை. அவர்களைப் போல் தானே பிள்ளையுமிருக்கிறான்? என் மகள் படித்த படிப்புக்கு அவன் எம்மாத்திரம்? மானமில்லாமல் குடித்து விட்டு, மரியாதை தவறி நடக்கிறான். நாலுபேர் பார்த்தால் என்ன சொல்லுவார்கள் நம்மை? கள்ளச்சாவி போட்டு வீட்டுப் பணத்தை திருடி சூதாடுகிறான். குடிகாரன் என்று ஊரார் காரித்துப்புகிறார்கள். தாய் மாமன் என்றால் அக்காள் பெண்ணின் வாழ்வை அதோகதியாக்கிவிட வேண்டுமென்கிற சட்டமா? என் உயிர் உள்ள வரையில் லலிதா உன் தம்பிக்கு வாழ்க்கைப்பட மாட்டாள். இதை உறுதிப்படுத்திக்கொள்” என்று வார்த்தையை மளமள வென்று கொட்டி விட்டார் சுந்தரம். அவர் பேச்சிலே கனல் தெறித்தது. முகம் சிவந்துவிட்டிருந்தது. உக்ர தாண்டவ மூர்த்தியைப் போல் காணப்பட்டார் அவர்.

“போதும் நிறுத்துங்கள்! என்னை என்னவேண்டுமானாலும் பேசிவிடுங்கள்! என் தாய் வீட்டைப்பற்றி மாத்திரம் கேவலமாய்ப்பேசவேண்டாம். என் பிறந்த வீட்டிற்கு ஒரு கோடாறியாய் வந்துவிட்டான் என் தம்பி! எப்போதோ சில சமயங்களில் தவறி நடந்ததை வைத்துக்கொண்டு, இன்று அவனை கேவலமாகப் பேசுகிறீர்கள்—தாய் தகப்பனையும் இழிவாக நினைக்கிறீர்கள். உங்கள் பெண் படித்து விட்டதைப் பற்றி பெருமையாக பேசுகிறீர்கள். ஏன்? உலகத்தில் படித்தப் பெண்கள், மணந்துக் கொண்ட கணவன்மார்களை நல்வழியில் திருத்துவது இல்லையா? என் தாய் வீடு ஏழ்மையானது என்றால், நீங்கள் என்ன அள்ளியா கொடுக்கிறீர்கள்? மட்டரகமாய் எதற்கு பேசவேண்டும்? நீங்கள் படித்து பதவியில் அமர்ந்து பெருமை வாழ்வு வாழ்வதால் பெண் கொண்ட விடத்தை கேவலமாய் நினைத்துவிடுவதா? என்னைக் கல்யாணம் பண்ணுமுன் இருக்கவேண்டும் இப்போதுள்ள யோசனையும், பேச்சும்!” என்று ஆக்ரோஷம் குரலையடைக்கப் பேசினாள் சுசிலா. கண்ணீர் கங்கைபோல் பெருகி தரையைத் தழுவியது.

இக்கட்டான நிலையில் என்ன் சொல்லுவது? என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார் [illegible].

(வளரும்)

Sri Marganatha Brand
STEEL TRUNK WORKS,
129, N.S.C. Bose Road, Madras-1
Factory: 89, RAJAJIPURAM
Wall Tax Road, Madras-3.
★
MANUFACTURERS OF STEEL TRUNKS, ALLIED PRODUCTS, OF AGRICULTURAL IMPLIMENTS, HOSPITAL REQUIREMENTS, BUILDING MATERIALS AND OTHER IRON AND STEEL MADE PRODUCTS.
Branches:
PEACOCK BRAND
Steel Trunk Works,
No. 1, Evening Bazaar, Madras-3.
Sarathy Industries
149, N. S. C. Bose Road,
MADRAS-1.
Prop: K. V. ALWAR.

உண்மைச் சம்பவங்கள்!

1794-ல் எலி விட்னி என்பவர் பஞ்சை சுத்தம் செய்யும் கையால் இயக்கும் கருவியைக்கண்டு பிடித்தார். விதையை நீக்கி உரமான உடை தயாரிக்கத்தக்க பஞ்சையெடுக்க முதன் முதலில் உதவியது இது.

1807-ல் ராபர்ட் புல்டன் என்பவர் கண்டுபிடித்ததுதான் ஸ்டீம் போட் என்னும் நீராவிப்படகு. அவரின் சாதனை பொருள்களை பல்வேறு நாடுகளுக்கு எடுத்துச் செல்லவும், வேறு நீராவி சாதனங்களை அமைக்கவும் வழி காட்டியது.



1823-ல் மன்ரே திட்டம்வழங்கப் பட்டது. ஐரோப்பிய வல்லரசுகள் தங்கள் ஆதிக்கத்தை மேற்கத்திய ஹெமிஸ்பியர் பிரதேசத்தில் மீண்டும் நிலைநாட்ட முயன்றபோது ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி ஜேம்ஸ் மன்ரே இந்தத் திட்டத்தை வழங்கினார்.

1848-ல் கலிபோர்னியாவில் தங்கம் கண்டு பிடிக்கப்பட்டது. அதிர்ஷ்டந்தேடிகளான பலரும் தங்கத்தைத் தேடிக்கொள்ளும் நோக்கத்தோடு அந்தப் பிராந்தியத்தில் குடியேறியதால் மேற்கு அமெரிக்காவில் ஜனத்தொகை பெருகியது.



1861-ல் ஐக்யநாடுகளின் உள்நாட்டு யுத்தம் துவங்கியது. *1863*-ல் அடிமை முறை ரத்து பிரகடணம் வெளியிடப் பட்டது. பிளவுபட்டிருந்த ஐக்கிய நாடுகள் லிங்கனின் சிறப்பான தலைமையில் *1865*-ல் மீண்டும் ஒன்றுபட்டன.

1881-ல் கிளாரா பார்டன் என்பவரால் அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. துன்பப் படுவோர்க்குத் துணைபுரியும் அந்த ஸ்தாபனம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தொடர்போடு உலகத்திற்கே சேவை செய்கிறது.

(தொடரும்)

பங்காளிக் காய்ச்சல்

ஒன்றுக் கூடி வளராவிட்டாலும், ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற காரணத்தால் பங்காளிக் காய்ச்சல் ஏற்படவே செய்தது. நினைப்பதைப் போல் எதுவும் முடிவதில்லையல்லவா? இயற்கை நியதி ஒருபுற மிருந்தாலும், நெஞ்சை யொளித்த வஞ்சக மென்று ஒன்று இருப்பதில்லையே! சுசீந்திரனின் நெஞ்சமே அவன் வஞ்சத்தைக் கட்டவிழ்த்து விட்டது.

ஆ—ர்.

"டாண்! டாண்! டாண்!" என்று கோவில் மணி அடித்துக் கொண்டிருந்தது. கோவிலில் ஒரே கும்பல். ஆடிக் கிருத்திகை யாதலால் பழனி ஆண்டவனை தரிசிக்க மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து போய்க் கொண்டிருந்தார்கள். சுவாமிநாத குருக்கள் தீபாராதனை செய்து கொண்டிருந்தார். தீபாராதனை முடிந்ததும் குருக்கள் கொடுத்த பிரசாதத்தை பக்தியுடன் பெற்றுக் கொண்ட சுந்தரேச முதலியார், தம் மனைவி பார்வதியுடனும், மகன் சுசீந்திரனுடனும் கோவில் பிரகாரத்தைச் சுற்றி முடித்தார். பிறகு ஓர் கல்லின் மேல் உட்கார்ந்து துக்கத்தினால் பெருகும் கண்ணீரை தன் துண்டால் துடைத்துக் கொண்டார். கணவர் கண்ணீர் விடுவதின் கருத்தைப் புரிந்துகொண்ட பார்வதியம்மாள் சென்ற கால சம்பவத்தை நினைந்து தானும் விசும்பினாள்.

இதை உணர்ந்த முதலியார் மற்றவர்கள் கவனியாமல் இருக்கவேண்டி, பரபர வென்று எழுந்துச் சென்று தன் காரை அடைந்தார். அவரும் பார்வதியும் காரில் அமர்ந்தவுடன் சுசீந்திரன் அதை ஓட்டினான். கார் மெதுவாக சென்றுகொண்டிருந்தது. சுசீந்திரன் அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தான்.

"அப்பா உங்கள் முகம் ஏன் வாட்டமடைந்திருக்கிறது?"

ஸ்ரீமதி இந்திரா ஆராவமுதன்

முதலியார் தம்தொண்டையை மெதுவாக கனைத்துக் கொண்டு தம்முடைய வருத்தத்திற்குக் காரணத்தைக் கூறினார்.

"சுசி! முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் எனக்கு மணமாகியது. ஆனால் மணமாகி எட்டு ஆண்டுகள் வரை குழந்தை எதுவும் பிறக்கவில்லை. அப்போது நான், குழந்தை பிறந்தால் தங்கத்தினால் வேல் செய்து செலுத்துவதாக முருகனை வேண்டிக் கொண்டேன். அதற்கு அடுத்த வருடமே முருகனருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு 'சிவகுமார்' என்று பெயரிட்டோம். அவ்வருடம் கம்பெனியில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டது, பணக் கஷ்டத்தினால் செலுத்தவேண்டிய பிரார்த்தனையும் தடைப்பட்டு வந்தது. இதே ஆடிக்கிருத்திகை யன்று அதாவது இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் 'சிவன்' மூன்று வயது குழந்தை. அப்பொழுது நீயும் பிறந்து விட்டாய்.

நீ கைக்குழந்தையாக இருந்ததால் நானும் சிவனும் மட்டுமே கோவிலுக்கு வந்தோம். கடையில் கும்பலாக இருந்ததால் சிவனை ஒரு கெஜ தூரத்தில்நிறுத்தி விட்டு பூவும், பழமும், வாங்கிக்கொண்டு திரும்பினேன். அவனைக் காணவில்லை. சுற்றுப்புறமெல்லாம் தேடி அலைந்தேன். எங்கும் கிடைக்கவில்லை. போலீசுக்கும் தெரிவித்தேன். இன்னும் அவனைப்பற்றி ஒரு செய்திக்கூட கிட்டவில்லை. குமரக்கடவுளுக்கு எங்கள் மேலுள்ள கோபம் இன்னும் நீங்கவில்லைபோலிருக்கிறது" என்று மீண்டும் முதலியார் தன் கண்களைத் துடைத்துக்கொண்டார். இதற்குள் கார் அவரது பங்களாவான 'சிவாலயத்தை' அடைந்தது. 'சிவாலயம்' உண்மையில் தெய்வீக அழகுடன் விளங்கியது என்றே சொல்லலாம். உள்ளே நுழைந்த முதலியார் தன்னுடைய "சுசீந்திரன் மோட்டார் கம்பெனி"க்கு மறுநாள் தன்

மகனுடன் வருவதாக போன் செய்தார்.

முதலியார் தன் மகனுடன் கம்பெனிக்கு மறுநாள் வருவதை அறிந்த மானேஜர் வாஞ்சி நாதய்யர் அவரை வரவேற்பதற்குரிய ஏற்பாடுகள் செய்தார். அவர் வகுத்த ஏற்பாடுகளை கண் இமைக்கும் பொழுதில் செய்துவிட்டு மாலை ஆறு மணிக்கு அவர் எதிரில் விடைபெற்றுக் கொள்ள வந்து நின்றான் உதவி மானேஜர் சந்திரன். சந்திரனிடம் முதலியாருக்கும், மானேஜருக்கும் ஒரு வித வாஞ்சையும், பிடிப்பும் இருந்தது. சந்திரன் விடைபெற்றுக்கொள்ளும்போது மானேஜர் எழுந்து அவனை தட்டிக்கொடுத்து "நீ வறுமையில் வளர்ந்து கஷ்டப்பட்டாய், நாளடைவில் உன் அறிவு நுட்பத்தால் முன்னுக்கு வந்தாய். இன்னும் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமென்று கடவுளை பிரார்த்திக்கிறேன். உடனே நீ போய் நோய் வாய்ப்பட்டிருக்கும் உன் அன்னையைப் பார். மற்றவைகளை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம், வீட்டிற்கு போ" என்றார். மிகுந்த கவலையுடன் வீட்டிற்குள் நுழைந்து தன் தாய்க்கு வேண்டிய மருந்துகளை கொடுத்தான். அவன் தாய் மரணப்படுக்கையில் கிடந்தாள் என்றே சொல்லலாம், நிலைமை கவலைக்கிடமாய் இருந்தது. டாக்டரை அழைத்து வந்து காட்டினான். அவர் ஏதோ ஒரு மருந்தை எழுதிக்கொடுத்து விட்டு போய் விட்டார். மறுநாள் வேலைக்குப் போவதா, வேண்டாமா? என்று அன்றிரவெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தான். மறுநாள் கம்பெனிக்குப் போய் வைத்திய செலவிற்கு முன் பணமாக ஏதேனும் சிறு தொகை பெற்று வரலாமென்று, பக்கத்திலுள்ளவர்களிடம் தன் தாயை பார்த்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு கண்களில் நீர் சுரக்க கம்பெனிக்கு விரைந்தான்.

சந்திரனின் தாய் உடல் நிலை மோசமாய் இருப்பதை மானேஜர் மூலம் கேட்டறிந்த சுந்தரேச முதலியார், சந்திரனை பார்த்து விட்டு வர சுசீந்திரனை அனுப்பினார். சந்திரனை தேடி வந்த சுசீந்திரன் உள்ளே நுழைந்தான். அப்போது தான் டாக்டர் கொடுத்த கடைசி ஊசியின் பயனாக கண்களை மெல்ல திறந்தாள் சந்திரனின் தாய். அவள் பஞ்சடைந்தக் கண்களுக்கு சுசீந்திரனுக்கும், சந்திரனுக்குமுள்ள வேற்றுமைகள் தெரியவில்லை. சந்திரனென்றே எண்ணினாள் சுசீந்திரனை. கட்டிலருகில் நின்ற சுசீந்திரனை தன் சமீபத்தில் அமரச்சொன்னாள் கிழவி. தான் யாரிடம் கதையை கூறுகிறோம் என்பதை உணராத அந்தக் கிழவி "சந்திரா! உன்னிடம் இத்தனை நாள் கூறாததை இன்று நான் சொல்லுகிறேன், கேள்" என்றாள். அவள் தழுதழுத்தக்குரலில் பேசினாள். அவள் பேச்சு அவ்வப்போது தடைப்பட்டது.

"இருபத்துமூன்றுவருடங்களுக்கு முன் ஆடி கிருத்திகையன்று பழனி ஆண்டவன் சன்னதிக்கருகே உன்னை மயக்க நிலையில்கண்டெடுத்தேன். உன் பட்டு சொக்காய் தவிர உன் உடலில் வேறு நகைகள் ஒன்றும் இல்லை," என்று சொல்லி,தன் தலையணையின் கீழிருந்து ஒரு மக்கிப்போன பட்டுச் சட்டையை எடுத்து அவன் கையில் கொடுத்ததுடன் கிழவியின் தலை சாய்ந்தது! பிறகு அவளால் பேச முடியவில்லை, சிறிது நேரத்தில் உயிரும் பிரிந்தது. முந்திய தினம் தகப்பனார் சொன்ன சங்கதியையும், இன்று இந்த கிழவியின் வார்த்தைகளையும் கேட்ட சுசீந்திரன் சந்திரன் தான் தன்னுடைய காணாமற்போன அண்ணன் சிவகுமார் என்பதை புரிந்துக்கொண்டான். அவன் எண்ண அலைகள் மோதின. பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. முதலியார் சந்திரனை தன் மகன் என்று அறிந்தாரானால் உடனே தன் பிரார்த்தனையை செலுத்திவிட்டு நிம்மதியடைவார். அந்த நிமிடத்திலிருந்து தனக்கு எல்லாவற்றிலும் சுயேச்சை பறிபோய் ஒரு போட்டி ஏற்படும்என்று நினைத்தான். அச்சட்டையை தன் நிஜார் பையில் போட்டுக்கொண்டு, வந்த சுவடு தெரியாமல் போய் விட்டான்.

மருந்துக்குப் பணம் பெற்று வந்த சந்திரன் தாயின் சவத்தையே கண்டான். வாங்கி வந்த பணத்தைக் கொண்டு தன் தாயின் இறுதிச் சடங்குகளை செய்தான். சுசீயின் காலம் எப்போதும்போல் ஓடிக்கொண்டிருந்தது. சுசீ சந்திரனைப் பற்றி யாரிடமும் கூறவில்லை. தகப்பனாருடன் கோவிலுக்குப் போகும் போதும் சந்திரனின் முகமும் வேலும் அவன் மனக்கண் முன் நர்த்தனமாடும். இதே மனக் கவலையுடன் அலையும் சுசிக்கு ஒரு நாள் நல்ல ஜுரம் கண்டது. டாக்டர்கள் சிகிச்சை செய்தும் நாளுக்கு நாள் அவனுடைய ஜுரம் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

நோய் முற்றி பிரக்ஞை இழந்தான். வாய் பிதற்றியது "அப்பா! சந்திரன்! வேல்)" என்ற வார்த்தைகளை அடுத்தடுத்து உதிர்த்தான். முதலியாரும் பார்வதியம்மாளும் வேலவன் தங்கள் வேண்டுதலை இவ்வழியில் ஞாபக மூட்டுவதாக எண்ணி பயந்து விட்டார்கள். மறுபடியும் ஆண்டவன் முன்னிலையில் மண்டியிட்டு சுசீ பிழைத்தெழுந்தால் அவர் சந்நிதியில் இரட்டைவேல் சாத்துவதாய் வேண்டிக் கொண்டார்கள். அன்று சுசீக்கு ஜுரம் கொஞ்சம் குறைந்தது. முதலியாரும், அம்மாளும் இரண்டு தங்க வேல்களுக்கு பூஜை போட்டுக் கொண்டிருந்தார்கள். அதைப்பார்த்துக்கொண்டே சுசீ தூங்கி விட்டான். தூங்கிய அவன் வீடே அதிரும்படி கூவினான்.

முருகப் பெருமானின் பூஜையிலிருந்த இரண்டு வேல்களும் அவன் கண்களை குத்த வருவதுபோல் கனவு கண்டான். கண்களைத்திறவாமலேயே அண்ணா! "அண்ணா!" வென்று அலறினான். அப்பொழுது அருகிலிருந்த முதலியார் அவனைத் தடவிக்கொடுத்தபடி "சுசீ! அண்ணன் இன்னும் கிடைக்கவில்லையே! நீ நிம்மதியாய்த் தூங்கு" என்றார். ஆனால் சுசீ படுக்கையிலிருந்து எழுந்து விட்டான். அவன் உடல் அச்சத்தால் நடுங்கியது. தள்ளாடியபடியே எழுந்து தந்தையின் கால்களைப் பற்றிக்கொண்டு "அண்ணா கிடைத்து விட்டான் அப்பா!" என்றான். பிரமித்து நின்ற தந்தையை அருகில்அமரும்படிச்செய்து, கிழவி கூறிய கதையையும், தன் சுயநலத்தால் அதை மறைத்ததையும், கடவுள் தன் இரட்டை வேல்களால் தன் மன இருளை அகற்றியதைப்பற்றியும் விவரமாய் கூறினான். அவ்வருடம்ஆடிக்கிருத்திகையன்று வழக்கத்தைவிட கூட்டம் அதிகமாய் இருந்தது. ஏனெனில் அன்று முதலியாரின்பிரார்த்தனைப்படி முருகப்பெருமான் இரட்டை வேலுடன் தோன்றினார். சுவாமிநாத குருக்கள் அர்ச்சனை முடிந்ததும் பிரசாதத்தை முதலியாரிடம் பக்தியுடன் கொடுத்துக் கொண்டே "ஆண்டவன் உங்களை இவ்வளவு சோதனைக்குள்ளாக்கிய தன் மூலம் இரண்டு வேல்களைப் பெற்று விட்டார்". என்றார். இதைக் கேட்ட முதலியார் தன் அருகிலிருந்த இரு மைந்தர்களையும் நோக்கி புன்னகைப் புரிந்தார்.

டாண்! டாண்!! டாண்!!! என்று கோவில் மணி அடித்தது.

அப்போது அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று,

M. முகம்மது அப்துல் காதர்

இரும்பு வியாபாரம்

சப் ஜெயில் ரோடு, திருச்சிராப்பள்ளி.



எங்களிடம் பக்கெட், குடம், தொட்டி, ஆலைக் கொப்பரைகள், இரும்பு தகட்டினால் செய்த எண்ணை சட்டி வகையறாக்கள், வடசட்டி ரகங்கள், தோசைக் கல், ரவா தோசை கல்களும், மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

★

இன்னும், காபி கிளப்புகளுக்கும், மிட்டாய் கடைகளுக்கும் தேவையான இரும்பு சட்டிகளும் குறித்த நேரத்தில் ஆர்டர்களுக்கு சப்ளை செய்யப்படும்.

P. ஹுசேன்ஷா & சன்ஸ்

(பூரண உரிமையாளர்)

P. H. முகமது நஸீருத்தீன்

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்

G I பைப் & பைப் பிட்டிங்ஸ் வியாபாரம், இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்.

●

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456 போன் : 786 தந்தி : HARDWARE

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,

Government Approved Fabricator & Contractor.

(Regd. No. S. 5.)

A. C. C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trichengode, (Salem Dt)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப் பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவி களும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலை களும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

உழைப்பும் — பிழைப்பும்

உழைப்பின்றி பிழைப்பில்லை. உழைப்பின் அடிப்படையிலேயே உயிர் வாழ்கிருன் மனிதன். மனிதன் மாத்திரமல்ல; உயிர்ப்பிராணிகள் யாவுமே உழைத்து உயிர் வாழ்கின்றன. மனிதனுக்கு இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, இடம் இவற்றைத் தேடிக்கொள்ள உழைப்புத் தேவைப்படுகிறது. அதே போல் இதர பிராணிகளுக்கு உணவு தேடிக்கொள்வதற்காக உழைப்புத் தேவைப்படுகிறது.

மனிதர் உள்ளிட்ட இதர ஜீவவர்க்கங்கள் யாவற்றிற்குமே உணவு அத்தியாவசியத்தேவையாய் உள்ளதால் அதைத் தேடிக்கொள்ள உழைப்பை மேற்கொள்ள வேண்டிய நிலையை இயற்கை உண்டாக்கி விடுகிறது.

காலையில் உதயமாகும் சூரியன் அந்திப்பொழுது வரை தன் செங்கதிர்களைச் சிதறவிட்ட வண்ணம் சஞ்சரிக்கத் தவறுவதில்லை; சந்திரன் தன் இரவு பவனியை இயற்கை நியதிக்குன்ருது நடத்தி வருவதை நாம் காண்கிருேம். கோடைக் காலத்தில் கொடிய வெப்பம் மாரிக்காலத்தில் தட்பம்; இவையெல்லாம் இயற்கையின் இயக்கத்தை விளக்குவனவே.

மனிதனையோ, இதர ஜீவர்களையோ உழைக்குமாறு இயற்கை இயக்கிக் கொண்டிருக்கிறதென்பதை இவற்ருல் நாம் அறிய முடிகிறது.

காலைப்பொழுதில் உணவு தேடி பறவைகள் பறந்து செல்கின்றன. மிருகங்கள் புல்தரை நாடிச் செல்கின்றன. மனிதன் தொழில் தேடிச் செல்கிருன்.

இயற்கையின் பிடியில் சிக்கியுள்ள ஜீவவர்க்கம் அதன் இயக்கத்திற்கு மாறுபட்டு நடந்து கொள்ள முடிவதில்லை.

குழந்தை சிறுவனுகி வாலிபப்பிராயத்தை யெட்டி முழுமனிதத் தன்மையை

“கோமாள்”

அடைந்து வயோதிகனுய் மாறிமரிக்கும் நிலையை இயற்கை உண்டாக்கி வருகிறது. இந்தப் பிராயமாற்றங்களிலிருந்து மனிதர்களாகட்டும், மற்ற ஜீவவர்க்கங்களாகட்டும் தப்பியதில்லை. மாறுபாடாய் நடந்து சாவிலிருந்துத்தப்பி சிரஞ்சீவித்தன்மையை அடைந்ததில்லை எந்த மனிதனும், எந்த ஜீவவர்க்கமும்.

ஜீவிய காலம் வரைஉணவுக்கும், உடைக்கும், இடத்திற்கும் இடறின்றி வாழவே மனிதன் விரும்புகிருன். அந்த விருப்பத்தின் பயனுய் உழைக்கிருன்.

பகுத்தறிவு உடையவனுன மனிதன் இன்றைய தேவை முடிந்தது. நாளை தேவைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்றெண்ணுவதில்லை. நாளைக்கும் வேண்டும். நாட்பட்டும் நாம் தேடுகிறவை உதவியாய் இருக்க வேண்டும் என்று எண்ணுகிருன். அதன் பயனுய் உழைப்பை அதிகப்படுத்திக் கொள்கிருன்.

கையளவு நாணயத்தைக் கொண்டு கனத்த அளவு பண்டங்களை வாங்கும் திட்டத்தை உண்டாக்கிக் கொண்டான் மனிதன். மனிதனின் பகுத்தறிவு நாணய மாற்றை சிருஷ்டித்தது. அதனுல்,அவன் உழைப்பு மேலோங்க ஏதுவாகியது.

பண்டமாற்ருேடு மனித அறிவு மட்டுப் பட்டிருந்தால், பொருளாதாரம் நாட்டின் நாலு திசைகளிலும் பரவியிருக்க முடியாது போயிருக்கும்.

நாணய மாற்றிஞல் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள இதர நாடுகளோடும் நாம் தொடர்பு கொள்ள அனுகூலமாகியது.

இயற்கை நம்மைப் படைத்து அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்துள்ள மனித இனத்தோடு தொழிலுறவு கொள்ளும் திட்டத்தை நாம் படைத்தோம்.

வல்லரசுத் தன்மையில் சில நாடுகள் தலை தூக்கிநிற்கின்றன. அதற்குக் காரணம் அந்நாடுகளில் தொழில் வளர்ச்சி மேலோங்கியுள்ளதே! ஒரு நாடு தொழில் வளர்ச்சியுற்றிருக்கிறதென்ருல் அதற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் உழைப்பேயெனபது வெள்ளிடை. உழைப்பாளிகள் நிறைந்த

Make up and other meterials as Art Colours for Stage and Screen, Powder, Snow, Hair Oil, Pomade, Hair Cream, Eye-tex, Chandu, Colour Kumkum, Nail Polish, Tooth Powder, Eucalyptus Oil, Inks all requisites & all kinds of soaps.

2/21, Pilliar Koil Street,
MADRAS-3.

எந்த நாடும் பின் தங்கி விடுவதில்லை. மரத்திற்கு வேர்கள் ஆதாரமாய் இருப்பது போலவே, நாட்டின் வளர்ச்சிக்கு உழைப்பாளிகள் ஆதாரமாய் இருக்கிறார்கள்.

நிறைந்தப் பொருள் வசதியுள்ளவனும், பரம ஏழையும் உழைப்பைப் பொறுத்தவரையில் ஒரே தரத்தவர்களே!

நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கிறான் ஏழை. பொருள் வசதியுள்ளவன் தன் பொருளை ஈடுபண்ணி தொழில் ஸ்தாபனங்களை நிறுவி அவற்றின் மூலம் பொருளைப் பெருக்கத் துடித்து நிற்கிறான். அவன் உடலுழைப்பில் ஈடுபடவில்லையாயினும் உள்ளத்தால் உழைக்கிறான். அவன் திட்டங்களை வகுக்கிறான். அவற்றின் மூலம் திரவியந்தேட தீவிரமாய்ச் சிந்திக்கிறான். சிந்தித்து முடிவு கண்டு செயலில் இறங்குகிறான். அவன் உழைப்பு உடல் சம்பந்தப்பட்டதல்லவாயினும் உள்ளத்தைப்பற்றியது.

ஏழையின் உழைப்பு புறத்தைப் பற்றியது.

பணக்காரனின் உழைப்பு அகத்தைப் பற்றியது.

புற உழைப்புக்குக் குறைந்ததல்ல, அக உழைப்பு.

விவசாயத்தில் நல்ல பலன் கண்டதாய்ப் பூரிப்படைகிறோம். துணி ஆலைகளினால் நல்ல வருமானம் கிட்டியதாய் அகமகிழ்கிறோம். இயந்திர உற்பத்தியால் பெரும் பொருள் லாபமாய்க் கிட்டியதறிந்து களிக்கிறோம் இவையெல்லாம் புற உழைப்பின் பயனே.

இது விஞ்ஞான உலகம். உலகமக்களையே அதிரச் செய்துள்ள அணுகுண்டு, ஜலவாயு குண்டுக்களின் நாசசக்தி ஒருபுறம் அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. செயற்கைச் சந்திரன்களைச் சிருஷ்டித்து செவ்வாய் மண்டலத்தை யடையும் முயற்சி மற்றொரு புறம் மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ரேடியே, டெலிவிஷன் விமானம் இவையெல்லாம் அக உழைப்பாலானவையே! 'தேவை' யென்ற அடிப்படையில் மனிதன் அகத்தாலும், புறத்தாலும் உழைக்கவேண்டியவனாய் இருக்கிறான்.

குதிரை, வண்டியை இழுக்கிறது. அதன் உழைப்பு புறத்தைப்பற்றியது. வண்டியில் உட்கார்ந்து ஓட்டிச் செல்லும் பாகனின் உழைப்பு அகத்தைப்பற்றியது, அக உழைப்பும் புற உழைப்பும் ஒன்றியே தான் செயலாகிறது.

கட்டிடம் கட்டுமுன் திட்டமிடுகிறான். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் கட்டிடத்தை எழுப்புகிறான். அக உழைப்பும், புற உழைப்பும் ஒன்றித்து கட்டிடமாய் அமைகிறது.

இவ்வாறே உலகம் அக உழைப்பாலும், புற உழைப்பாலும் வளர்ச்சியடைந்து வருகிறதைக்காண்கிறோம்.

உழைப்பில்லாமல் உயிர் வாழவே பலரும் விரும்புகின்றனர். உழைக்கும் சக்தி இயற்கையிலேயே மனிதனிடம் அமைந்திருக்கும்போது, அதைச் செயல் படுத்தாமலிருக்க முடிவதில்லை.

உடலாலோ, உள்ளத்தாலோ உழைக்காமலிருந்தாலும் உள் உறுப்புக்கள் இயங்கிக்கொண்டுதாமிருக்கின்றன. உள் உறுப்புக்கள் இயங்கிக் கொண்டிருக்கும்போது புற உறுப்புக்கள் செயலற்றிருப்பதில்லை.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" யென்பது அப்பர் சுவாமிகளின் திருவாக்கு. பணியென்ற உழைப்பு பஞ்சபூதக் கூட்டுறவாலான உடலைத்தாங்கியவர்களின் இன்றியமையாத கடமையே யென்பது நிதரிசனமாகிறது.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்,

வீணில் உண்டு களித் திருப்போரை நிந்தனை செய் வோம்''

என்று உழைப்பின் அவ சியத்தை வலியுறுத்துகிறுர் பாரதியார்.

உழைப்பினுல் உடல் உர மடைகிறது. வளர்ச்சியுறுகி றது. உள்ளம் ஊக்க முறுகிறது. வாழ்க்கைக் கான சாதனங்களைத் தேடிக் கொள்ள உதவுகிறது.

''எங்கும் தொழில்கள் இயற்கையின் குணங்களால் செய்யப்படுகின்றன. அகங் காரத்தால் மயங்கியவன் 'நான் 'செய்கிறேன்' என்று நினைக்கிறுன்''—பகவத்கீதை இதனுல் இயற்கையே மனித னைத் தொழிலில் ஈடுபடுத்து கிறதென்பதை நாம் அறிய முடிகிறது.

பிணி, மூப்பு, சாக்காடு என்னும் மூவித நிகழ்ச்சிகள் உலகிலுள்ள வரையில் மனி தயினம் மாத்திரமல்ல; ஊர் வன, பறப்பன, நடப்பன யாவுமே தொழிலின்றி வாழ முடியாது.

—●—

ஒரு அணு செலவில் ஒரு ஆண்டு எரியும் 'பல்ப்'

நியூயார்க் நகரில் உள்ள வெய்டிங் ஹவுஸ் எலக் டிரிக் கம்பெனி ஒரு புதிய 'பல்ப்' செய்திருக்கிறது. அது மேன்மையான பச்சை ஒளி வீசுகின்றது. 10,000 மணி நேரம் அது வெளிச்சம் கொடுக்கும். அது தட்டை வடிவமானது என்றும், வெப்பத்தை வெளியே விடுவதில்லை என்றும், ஒரு பென்னிக்கும் (ஒரு அணுவை விட குறைவான) செலவில் அது ஓராண்டு எரியும் என் றும் அதனை உற்பத்தி செய்த கம்பெனி சொல் கிறது. படிப்பதற்கு அத னைப் பயன்படுத்த முடியாது. வீட்டில் வழிகளிலும், குளிக் கும் அறைகளிலும், படிக் கட்டுகளிலும் அந்த பல்பை உபயோகிக்கலாம். அடுத்த ஆண்டு அது விற்பனைக்கு வரும்.

பொன்மொழி

—❀—

''நாம் அனைவரும் முற்றி லும் சமமானவர்கள். ஆனுல் இந்த சமத்துவம் ஆத்மீக ரீதியில் ஆகும். சரீர ரீதியில் அல்ல; மற்றவனை விடத் தான உயர்ந்தவன் என்று ஒருவன் பாவிப்பது கடவு ளுக்கும் மனிதனுக்கும் எதி ராக இழைக்கும் துரோக மாகும்''. —காந்தி.

ஏ. டி. எச்.

ஆறுமுகம் டெய்லரிங் ஹவுஸ்

நெ. 16, அருணசல நாய்க்கன் ரோடு,

சிந்தாதிரிப்பேட்டை—சென்னை-2.

★

அரசாங்க சர்டிபிகேட் பெற்றவர், பக்கிங்காம் கர்னுடிக் மில் துணிகளால் ரெடிமேட் உடைகள் தயாரித்து மொத்தமாகவும், சில்லரையாகவும் தரப்படும். ஒருமுறை எமது காரியாலத்துக்கு விஜயம் செய்து ஆதரிக்கக் கோருகிறேன்.

பூரண உரிமையாளர்:

A. ஆறுமுகம்.

இளைஞர் பகுதி :

தன் கையே தனக்கு உதவி

நவராத்திரிக்காகப் பள்ளிக்கூடம் மூடப்பட்டது. கோபு நவராத்திரி விடுமுறையைக் கழிக்க தன் மாமா வீட்டிற்குச் சென்றான். கோபுவின் மாமா வீடு மதுரையிலிருந்தது.

திருச்சிராப்பள்ளியிலிருந்து ரயிலேறி மதுரைக்கு வந்தான் கோபு. கோபுவின் மாமா ஸ்டேஷனுக்கு வந்து கோபுவைக் கூட்டிக் கொண்டு போனார்.

கோபுவின் மாமா வீட்டில் கோபுவுடன் விளையாட, பிரஸாத்இருந்தான். பிரஸாத் கோபுவைவிட சின்னவன். ஆதலால், கோபுவை அத்தான் என்றுதான் அழைப்பான்.

ரயிலிலிருந்து வந்ததால் கோபுவை முதலாவதாகக் குளித்து வரும்படிச் சொன்னார் கோபுவின் மாமா.

கோபுவுக்குத் தனியே குளிக்கத் தெரியாது. வீட்டில் அவனை அம்மாவே தான் குளிப்பாட்டி, சட்டையெல்லாம் போடுவாள். ஆதலால் அன்று கோபுவை அவனுடைய மாமாவேதான் குளிப்பாட்டினார். சொக்காய் எல்லாம் போட்டார்.

அன்று சாயங்காலம்கோபுவையும், பிரஸாத்தையும் ஊர் சுற்றிக்கொண்டு காண்பிப்பதாகச் சொன்னார் கோபுவின் மாமா.

மாலை வந்தது. பிரஸாத் முகம் குழுவி புதுச் சொக்காய் போட்டுக்கொண்டு எல்லாம் தானாகவேச்செய்து கொண்டான். ஆனால், கோபுவுக்கோ, முகத்தைக் கழுவவோ சட்டை போடவோ எல்லாத்துக்கும் மாமாவின் உதவி வேண்டியிருந்தது.

பிரஸாத் கோபுவைவிட சின்னவன் அல்லவா? ஆதலால், கோபுவுக்கு பிரஸாத் செய்யக்கூடிய காரியங்களை தன்னால் செய்து கொள்ள முடியவில்லையே என்று கொஞ்சம் வருத்தம்.

"குமரன்"

மாலையிலே மாமா கோபுவையும், பிரஸாத்தையும் மீனாட்சி அம்மன் கோயிலைக் காண்பித்தார். கோயிலில் அர்ச்சனை செய்து தேங்காய் பழம் எல்லாம் வாங்கிக் கொண்டார். பழத்தையும் தேங்காயையும் கோபுவிடம் வைத்துக்கொள்ளச் சொன்னார்.

கோயிலை விட்டு வெளியே வரும்போது கோபு மாமாவிடம் கேட்டான்.

"மாமா இங்கே கூலியாள் யாரும் கிடையாதா?

"எதற்காக கோபு கூலியாள்?" என்றான் பிரஸாத்

"இந்த தேங்காயையும் பழத்தையும் வைத்துக் கொள்ள" என்றான் கோபு.

"இதற்காகவா? இங்கே கொடு நான் வைத்துக் கொள்கிறேன். இந்தச் சின்னக்காரியத்துக்காகவா"? என்றான் பிரஸாத். ஊரிலே எங்கள் வீட்டிலே எல்லா காரியத்துக்கும் ஆள் உண்டு" என்றான் கோபு.

"ஆள் என்னத்திற்கு அத்தான், நம்முடைய காரியங்களை நாமே செய்துகொண்டால்தான் நல்லது" என்றான் பிரஸாத்.

கோபுவும் பிரஸாத்தும் பேசிக்கொண்டதை மாமா கொஞ்சம் நேரம் சும்மா கேட்டுக்கொண்டு வந்தார். பிறகு கோபுவிடம் கேட்டுக் கொண்டார்.

"கோபு! பிரஸாத் சொல்வது தான் சரி. நம்முடைய காரியங்களை நாம் தான் செய்துகொள்ளவேண்டும்."

"என் மாமா?"

"சொல்கிறேன் கேள். எல்லாப்பெரிய மகான்களும் கூடுமான வரையில் தம் காரியங்களை தாமாகவே செய்து கொள்வார்கள். ஏனென்றால் தம்முடைய தேவை தமக்குத் தானே தெரியும்? ஆதலால் நம் திருப்திக்கு ஏற்றவாறு காரியங்களைச் செய்து கொள்ளலாம். எல்லாகாரியங்களையும் பிறர் மூலம் செய்து கொண்டால் நமக்கு எப்போதும் பிறர் உதவி கிடைக்கும் என்பது என்னநிச்சயம்? நம் காரியங்களை நாமே செய்து கொண்டால் நமக்கு நல்ல பழக்கம் ஏற்பட்டு விடும். பழக்கம் இருந்தால் எல்லா காரியமும் சுலபமாகச் செய்து விடலாமல்லவா?"

"ஆமாம், மாமா இப்போது புரிகிறது. ஆனல் எந்த மகான்கள் எல்லாம் இப்படி இருந்தார்கள்?"

"எத்தனையோ பேர்கள். சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னே, வங்காளத்திலே ஈஸ்வர சந்திர வித்யாசாகர் என்று பெரிய கல்வி அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் ஒரு நாளைக்கு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் இருந்தார். அப்போது இரண்டு பிரயாணிகள் தங்களது சிறு மூட்டைகளைத் தூக்கக் கூலியாட்களை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தனர். யாரும் வரவில்லை. வித்யாசாகர் மிகவும் எளிய உடையே தரித்திருந்தார் 'ஆதலால் அவரை அழைத்து தங்கள் சுமைகளை தூக்கி வரமுடியுமா என்று கேட்டார்கள். வித்தியாசாகரும் மூட்டைகளை தூக்கிக் கொண்டு வந்தார். ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததும் வித்தியாசாகரை அவரது சேவகர்கள் கண்டு நமஸ்கரித்தனர். இதைக் கண்ட பிரயாணிகள் இருவரும் தாம் யாரோ பெரியவரை அவமானப்படுத்திவிட்டோம் என்று, மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர், வித்யாசாகர் அவர்களிடம் சொன்னர்!

"எப்போதும் தன் கையே தனக்குதவி என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளும்படி இந்தக்கதையை நான் ஒரு நாள் பிரஸாத்துக்குச் சொன்னேன். அன்று முதல் பிரஸாத் தன் காரியங்களை தானே செய்து கொள்வான். நீயும் அந்த மாதிரி இருக்க வேண்டும், தெரிந்ததா" என்ருர்.

"ஆகட்டும் மாமா" என்ருன் கோபு.

"இல்லை அப்பா. அன்றைக்கு நீங்கள் சொன்னீர்களே நமது காந்தியும் ராஜாஜீயும் கூட அப்படித்தான் எல்லாக் காரியங்களும் தாமே செய்து கொள்வார்கள் என்று"

"ஆமாம் அப்பா, நமது ராஜாஜி கூட அப்படித்தான்.

கதையைக் கேட்டுக் கொண்டே கோபுவும் பிரஸாத்தும் வீட்டுக்குத் திரும்பி விட்டனர். நடந்து வந்த அலுப்பே தெரியவில்லை அவர்களுக்கு.

அன்று முதல்கோபு "தன் கையே தனக்கு உதவி" என்ற நீதியை ஒரு நாளும் மறப்பதில்லை. கூடுமான அளவில் தன் காரியங்களை தானேசெய்து கொண்டான்.

விடுமுறைதீர்ந்தது. கோபு திருச்சிக்குத் திரும்பி விட்டான். கோபு தன் காரியங்களை எல்லாம் தானே செய்து கொள்வதைக் கண்டு கோபுவின் அப்பாவும் அம்மாவும் ரொம்பவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தனர்.

புஷ்தபா மார்ட்

இரும்பு வியாபாரம்

(அரசாங்க அங்கீகாரம் பெற்ற பேப்ரிகேட்டர்)

புதுக்கோட்டை.

பல ரக வாளிகள், டிரம்கள், கடகால்கள், கவலைசால்கள், ஏற்றசால்கள், சாந்து சட்டிகள், தோசை சட்டிகள், கீல் சட்டங்கள், வண்டிவார் கம்பிகள், மண் வெட்டிகள், மண்வெட்டிபூண், வண்டி வார் வளையம், கோழி முட்டை தொட்டிகள், பூட்டை வாளிகள், நெல் அவியல் அண்டாக்கள், மாட்டு தீனி தொட்டிகள், மாட்டு சங்கிலி, கை திராஸ் விட்டம் செட்டுகளும், பெரிய திராஸ் விட்டங்களும் உற்பத்தி செய்கிறோம்.

பலவிதமான வர்ணங்கள், வார்னிஷ், கற்பூர தைல வகைராக்களும், நிக்கல், பித்தளை, பிளாஸ்டிக் கதவு கைப்பிடிகள், தாழ்ப்பாள்கள், பூட்டு ரகங்கள், அட்டை கீல், ஸ்குரூ வகைராக்கள், இன்னும் பலரக கட்டிட சாமான்களும் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பனை செய்து வருகிறோம்.

பா. முகமது இஸ்மாயில்

பூரண - உரிமையாளர்,

எது அறிவு?

V. C. ராஜா

அறிவில் சிறந்தவர்களென்று தங்களைச் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், நினைப்பதோடில்லாமல் பறைசாற்றியும் கொள்கிறார்கள். அப்படிப் பறைசாற்றிக் கொள்வதை நம்புகிறவர்களுமிருக்கிறார்கள். அப்படி நம்பி ஏமாறுகிறவர்களின் எண்ணிக்கை ஓரளவில்லாமல் பெருகிக்கொண்டே போகிறது. இதனால்அறிவில் சிறந்தவர்கள் யார் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டிய அவசியம் நேர்கிறது. வாய்வீச்சினால் அறிவில் சிறந்திருப்பதாய் நடிப்பவரை நம்புவதா? செயலில் அறிவுத் திறமையைக் காட்டுகிறவரை நம்புவதா?

இதை விளக்க அடியில் காணும் கதை நல்ல வழிகாட்டியாய் அமையும்.

ஊரிலே திருட்டு பயம் 'அங்கே கல் விழுகிறது. இங்கே கன்னம் வைத்தார்கள், அங்கே வழிப்பறி நடந்தது' என்று எங்கும் ஒரே வதந்தி, இப்படியிருக்கையில் தெனாலிராமனது மேதையைப் பாராட்டி யாரோ ஒரு பிரபு நிறைய சன்மானம் அளித்திருந்தார். இச்சன்மானத்தை காதோடு காது வைத்தாற்போல் செய்யாமல், ஊரெல்லாம் கூட்டி நாலு பேரறிய பகிரங்கமாக கௌரவித்திருந்தார். தெனாலிராமன் மனைவிக்கு ஒரே திகில், அன்றிரவு எந்த திருடனாவது கட்டாயம் தங்கள் வீட்டிற்கு விஜயம் செய்வான் என்று நிச்சயமாக நம்பினாள். படுக்கும் வரையில் இந்த பீதியை மனதில் அடக்கி வைத்துக் கொண்டு இருந்தாள். அதற்குப் பிறகும் அவளால் அப்படி இருக்க முடியவில்லை.

'என்ன வீட்டிலே இவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு இவ்வளவு நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்து விட்டீர்களே!'' என்று கூறி தூங்கியவனை எழுப்பினாள். அப்பொழுது வெளியே ஏதோ சலசலப்பு கேட்டது. துக்கம் கலைந்தெழுந்த தெனாலிராமன் 'இந்தப் பிரமாத விஷயத்திற்கு என் தூக்கத்தைக் கலைக்க வேண்டுமா? என்று அதட்டினான்.

"என்னமோ, நீங்கள் செய்கிறது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை." என்றாள் அவள்.

"அதெப்படி உனக்குப்புரியும்? அதற்கு மூளை வேண்டாமா? எனக்குக் கிடைத்த சன்மானத்தை வீட்டிற்குள் வைத்திருக்க அவ்வளவு முட்டாளா நான்?" என்றான் தெனாலிராமன்.

"பின்னே அதை என்ன செய்தீர்கள்?" என்று மீண்டும் கேட்டாள் அவள்.

"ஒரு பெட்டியிலே வைத்துப் பூட்டி நம்முடைய தோட்டத்துத் துறவிலே போட்டிருக்கேன். அதை எந்தப் பயல் கண்டுபிடிக்கிறான், பார்க்கலாம்" என்று சற்று உரக்கவே கத்தினான், தெனாலிராமன்.

"உங்கள் சமர்த்தே சமர்த்து" என்று மெச்சியபடி அவள் தூங்கபோய் விட்டாள். தெனாலிராமனும் நிம்மதியாக தூங்கினான்.

விடிவதற்கு ஒரு ஜாமமிருக்கும். தெனாலிராமன் மனைவி விழித்துக்கொண்டு 'ஐயோ இதென்ன' இந்நேரத்தில் நம்ப தோட்டத் துறவில் யார் ஏற்றம் இறைக்கிறார்கள்?'' என்று தெனாலிராமனை எழுப்பிக்கூப்பாடு போட்டாள், "பைத்தியமே! இதை இப்போதுதானா கவனித்தாய்? நாம் தூங்கப் போகும்போதே இறைக்க ஆரம்பித்து விட்டார்களே" என்று சொல்லிக்கொண்டே அவன் எழுந்திருந்து தோட்டப் பக்கம் போனான்.

"டேய் புண்ணியவான்களே! நீங்கள் மகராஜனா இருப்பீர்கள்! என் தோட்டம் பூராவும் இதற்குள் தண்ணீர் பாய்ந்து விட்டிருக்கும். நீங்கள் இனிமேல் தப்பிக்க வழியைப் பார்க்கலாம். பொழுது விடிந்தால் தலையாரிகள் கையில் அகப்பட்டுக்கொண்டு விடுவீர்கள்" என்று கத்தினான்.

ஏற்றத்தை நிறுத்திவிட்டு இறைத்தவர்கள் ஓட ஆரம்பித்தார்கள். "டேய் நம்ம புத்தியைச் செருப்பால்தான் அடிக்கணும். தெனாலிராமனிடம் போய் திருடவந்தோமே! நம் காதில் கேட்பதற்காகத்தான் பணத்தை கிணற்றிலே போட்டிருப்பதாக உரக்கச் சொன்னான். அதை நாமும் நம்பி ஏமாந்தோமே" என்று அதில் ஒருவன் மற்றவனிடம் கூறினான்.

அபாய காலத்திலும் புத்தியை உபயோகித்து சொத்தையும் காப்பாற்றிக் கொண்டதோடு, திருட வந்தவர்களின் உழைப்பையும் பெற்றுக்கொண்ட தெனாலிராமனை அறிவின் சிகரமென்று போற்றுவதில் என்ன தடை?

AUCTION SALE

BY

Messrs. HANSON & CO.

at No. 10, Woods Road, MADRAS-2,

(NEAR ODEON)

Auction Every Sunday Without fail

Articles on view Saturday

Please send your surplus or unwanted Articles to our Show Rooms for quick disposal on Moderate terms

எந்தையார் வ. உ. சி.

(16-ம் பக்கம் தொடர்ச்சி)

வருவோர் போவோர்க்கெல்லாம் வ. உ. சி. வீடு, சொந்த வீடு!

சிறை மீண்டபின் தீவிர அரசியல் வாழ்க்கையில் வ. உ. சி. ஈடுபடவில்லை. காரணம் குடும்பம் பெருகியது. அது எய்ப்பில் இடறின்றி வாழ வகை செய்ய நாட்டம் கொண்டார். புத்தக வெளியீடுகள் வீறுவிறுப்புற்றன.

வள்ளுவரின் அறத்துப்பாலுக்கு வ. உ. சி. யின் விருத்தியுரை 1935 முற்பகுதியில் வெளியாயிற்று. அவர் விரைந்து முயன்றும் பொருட்பாலின் சில பகுதிகள் மட்டுமே அச்சியந்திரம் ஏறின. சிறை வாழ்க்கையின் கொடுமை அவரைப் பிணி வாய்க்குள் தள்ளியது. 1936 செப்டம்பர் முதல் படுத்த படுக்கையானார். ஆம், தமிழ் நாடு முழுதும் வீரக்களியாட்டம் புரிந்த அத் திருமேனி கட்டிலிற் குறுகிற்று. இறுதி நெருங்குவதை அவர் அறிந்தார்.

1936-ம் வருஷம் நவம்பர் மாதம் 18-ம் தேதி புதன் கிழமையின் இரவு தமிழ் வீரர் வ. உ. சி. அமரரானார். அரை நூற்றாண்டு வீர வாழ்க்கை நிறைவுபெற்றது. தமிழகம் துயரில் ஆழ்ந்தது.

அவரது இருபெரும் கனவுகள் அவர் ஆயுட்காலத்தில் நிறைவெய்தவில்லை. நாடு சுதந்திரமடையவில்லையே என்பதொன்று, வள்ளுவருக்குத் தம் உரை முழுவதையும் அச்சிட முடியவில்லையே என்பது மற்றொன்று, இதில் ஒன்று நிறைவேறிவிட்டது, மற்றொன்று இன்று வரை நிறைவேறவில்லை.

நன்றி மறவாமை

செய்தநன்றி பாராட்டும் செந்தமிழ்க் குலத்துதித்த சிதம்பரனார் தமக்குதவிய நன்மக்கள் அனைவருக்கும் நன்றி பாராட்டத் தவறினாரில்லை. வழக்காடுவதற்கு தென்னாப்பிரிக்காவிலிருந்து பொருளுதவிய தில்லையாடி வேதியப்பபிள்ளையின் நினைவாக ஒரு மகளுக்கு வேதவல்லி என்று பெயரிட்டார். சிறையிலிருக்கையில் எழுந்த வழக்கில் கைம்மாறு கருதாமல் வ. உ. சி. க்காக வாதிட்ட கோவை சைவப் பேரறிஞர் திரு ஸி. கே. சுப்பிரமணிய முதலியார் பெயரை தம் இரண்டாவது குமாரருக்குச் (எனக்கு) சூட்டி மகிழ்ந்தார்.

வெறுத்தது வெள்ளையர் கொடுங்கோன்மையையே அன்றி வெள்ளை மக்களை அல்ல

என்பதற்கு வ. உ. சி. யின் வரலாற்றில் சான்றுகள் பல உண்டு. சிறை மீண்ட சிதம்பரனுருக்கு மீண்டும் வழக்கறிஞர் பதவி பெற்றுத் தந்த உயர் நீதி மன்ற வெள்ளை நீதிபதி வாலஸ் துரையின் பெயரை தம் மூன்ருவது குமாரருக்கு வ. உ. சி. இட்டு வழங்கிய பெருமை, அந்நன்றி மறவாச் செம்மலின் சிறப்புக்கோர் உரைகல்.

சீர்திருத்தப் பணிகள்

அரசியலில் மட்டுமன்றி சமூகச் சீர்திருத்தத்துறைகளிலும் வ. உ. சி. முன்னணியில் நின்று பணிபல புரிந்திருக்கிருர். வீட்டிலேயே ராமய்யா தேசிகர் என்ற கண்ணிழந்த ஹரிஜனத் துறவியை நீண்டகாலம் ஆதரித்தார். தம் இனத்தாரின் வெறுப்பையும் கோபத்தையும் பொருட்படுத்தியதில்லை. இன்று சிதம்பரம் நந்தனர் பள்ளித் தலைவராக விளங்கும் துறவி சகஜானந்தம் எம். எல். ஏ. அவர்கள் வ. உ. சி. யிடம் தமிழ் படித்த மாணுக்கர். அந்நாளிலேயே அவர் புரிந்த ஹரிஜனப் பணிக்கு இவை சில சான்றுகள். வ. உ. சி. கலப்பு மணத்தையும் விதவை மணத்தையும் ஆதரித்தார். சில திருமணங்களைத் தாமே நின்று நடத்தி வைத்தார்.

தமிழ் நாட்டின் தவப்பயனுல் தோன்றிய அப்பெருமகன் பிறந்த, வாழ்ந்த இல்லத்தை சென்னை அரசாங்கம் ஏற்று நாட்டு மக்களின் உடைமையாக்கி நல்லதோர் நினைவாலயம் நிறுவ முன்வந்தமை போற்றற்பாலது. விரைவில் நினைவாலயம் எழத் தூண்டுதல் செய்வது தமிழ் மக்கள் கடமை.

வ. உ. சி. க்கு வாழ்த்து

வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
    மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதை விரைவிற் கேட்பாய்—நீ,
    வருந்தலை என் கேண்மைக் கோவே!'
தாளாண்மை சிறிது கொலோ யாம்புரிவோம்
    நீ இறைக்குத் தவங்கள் ஆற்றி
வாளாண்மை நின் துணைவர் பெறுகெனவே
    வாழ்த்துது நீ வாழ்தி! வாழ்தி!

—பாரதி.

P. M. Panjatchara Chetty,
P. Selvanatha Chetty & Co.,
JEWELLERS,
221, D, Nethaji Subhas Chandra Bose Road,
MADRAS-1

★

எங்களிடம் உத்தரவாதமான பொன், வெள்ளி நகைகள்
ரெடிமேடாகவும், ஆர்டர்பேரிலும் கிடைக்கும்.
நவீனமோஸ்தரில் கல்பதித்தும், எனமல் செய்தும் தரப்படும்
உத்தரவாதமான நகைகளுக்கு எங்களை அணுகுங்கள்.

தேசத் தந்தை வ. உ. சிக்கு வாழ்த்து

—::திருமகன்::—

★

எத்திசையும் புகழ் மணக்கும்
எழில்மேவும் வ. உ. சி, இதய வேந்தன்—
ஏற்ற முற செயல்பலவும்
இயற்றிட்டார், அந்நாளில் இடரை நோக்கி,
பித்தரென பிறர் எண்ண
பேரார்வங் கொண்டல்லோ புரிந்தார் தியாகம்,
வித்தகராம் அவர் வாழ்வு நம்மவர்க்கு வழி விளக்காய்
விளங்கக் கண்டோம்.

(வேறு சந்தம்)

செக்கிழுத்தார், கொடுஞ் சிறையில் இன்னலுற்றார்
எந்தை நாட்டின்,
பக்குவத்தை மனத்திருத்திப் பாடுபட்டார்
பரந்த நோக்கால்—பாரோர் காண
வக்கீல் தொழில் வருவாயில் வாழ்ந்த மேன்மை
வாட்டமோங்க நெஞ்சுரமாய்
தக்கதிது வென்றெழுந்த மனநிலையே
மதித்தற் பாற்றும்!

கப்பலையும் ஓட்டி நம்மை கடைத்தேற்ற
முயன்றிட்டார் கருணை வள்ளல்
ஒப்புவமை யில்லாத உன்னதமாம் மனநிலையில்
ஒன்றி நின்று
செப்பரிய செயலெனவே தீண்டாதார்
சேமம் எண்ணி—அந்தநாளில்,
நட்புரிமை யோடு செய்த நன்மைபல வாகுமிது
நவிலல் திறமோ!

தெள்ளு தமிழ் புலமையிலே முன்னேற முனைந்த மேலோன்!
திகட்டாத தீஞ்சுவையில் கவிதை மழை பொழிந்த துண்டு,
வள்ளுவரின் ஈரடிக்கு வகையான உரை நடையில்
விளக்கங் கண்டோன்!
கள்ளமிலா உள்ளத்தார் கண்டிட்டார் கருத்துரைகள்
கணக்கே யின்றி
வள்ளல் வழி நின்றெழுகும் வாடாத மனமுடைய
வ.உ. சி. நாமமது நீடு வாழ்க!

வீரம் விளைத்த வித்தகர்

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

லாளி ஒருவரிடம் க்ஷவரம் செய்துகொண்டிருந்தார். அப்போது அந்தத் தொழிலாளி வழக்கறிஞரிடம், "ஏன் சாமி, கலெக்டர் பட்டாளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்றபோது நீங்கள் அதற்கு ஆதரவாகப் பேசியதாகச் சொல்லிக்கொள்கிறார்களே, அது உண்மை தானா?" என்று கேட்டார்.

அதற்கு வழக்கறிஞர், "அதைப்பற்றி உனக்கென்ன? அது உன் வேலை அல்ல" என்றாராம்.

"அப்படியானால், உமக்கு க்ஷவரம் செய்வதும் என் வேலையல்ல" என்று சொல்லிக்கொண்டே, கத்தியை மடக்கி பெட்டியில் வைத்துக்கொண்டு வேகமாக நடையைக் கட்டி விட்டார் க்ஷவரத் தொழிலாளி.

எவ்வளவோ கெஞ்சியும் அவர் திரும்பவில்லை. வழக்கறிஞரோ அரை க்ஷவரத்தோடு அவமானப்படநேர்ந்தது. வேறு க்ஷவரத் தொழிலாளர் எவருமே இவருக்குச் க்ஷவரம் செய்ய கண்டிப்பாக மறுத்துவிட்டார்கள்.

அரை க்ஷவரத்தோடு வீட்டுக்குப் போனால் வைதீகத்துக்கு விரோதமென மனைவி மறுப்பாள்! ஊருக்குப்போனால் தேசத்துரோகி என மக்கள் மறுப்பர். என்ன செய்வது?

நேரே கலெக்டரிடம் சென்று நடந்ததைக்கூறி போலீஸ்காரர்களின் உதவி தனக்கு வேண்டுமென்று கேட்க, கலெக்டரும் அதற்கு மறுத்துவிட, வேறு வழியின்றி தலையில் முக்காடிட்டுக்கொண்டு ரயிலேறி திருநெல்வேலிக்குச் சென்றுதான் மீதியுள்ள சிகையை அவரால் சிரைத்துக் கொள்ள முடிந்தது!

இதற்குக் காரணம்? சிதம்பரனாரின் வீர உரையைக் கேட்டு மக்களின் மனத்திலே நாட்டுப் பற்று பொங்கி எழுவதுதான். அதைக்கவனித்த வெள்ளை கலெக்டர், ஊர் பிரமுகர்களைக் கூட்டி இதற்கு என்ன செய்யலாம் என்று கலந்து பேசினார். அந்த சந்தர்ப்பத்தில் தூத்துக்குடியில் அதிக போலீஸ் படையை வரவழைப்பது என்ற தன் எண்ணத்தையும் தெரியப்படுத்தினார் அவ் வழக்கறிஞர். இதை கூட்டத்திற்கு வந்திருந்த பெரும்பாலோர் எதிர்க்க நமது வழக்கறிஞர் அரங்கசாமி என்ற 'இராஜ விசுவாசி' மட்டும் மனப்பூர்வமாக ஆதரித்தார். அன்று முதல் அவர் தூத்துக்குடி மக்களின் பகைவரானார், அதன் விளைவுதான் அவருக்கு நடந்த மேற்கூறிய க்ஷவர மறுப்பு.

இப்படியாக வீர. சிதம்பரனார் அவர்கள், தன்னுடைய நெருப்புப்பொறி பறக்கும் பேச்சினால், நாட்டுமக்களிடம் ஒற்றுமையைஉருவாக்கி ஏகாதிபத்திய தாசர்களிடம் அவர்களுக்கு வெறுப்புணர்ச்சி ஏற்படச் செய்தார்.

1930ம் வருடம். காலஞ்சென்ற தேசபக்தர் ஸ்ரீ S. S. விஸ்வநாததாஸ் தமிழ் நாட்டில் பல இடங்களில் நாடகமேடைகளின் மூலம் தேசபக்தியை ஊட்டி மக்களிடம் வீரத்தையும், தியாக புத்தியையும் பரப்பி வந்த காலம். அந்நிய ஆட்சி ஸ்ரீ விஸ்வநாததாஸ் பேரில் ஜாமீன் கேஸ்தொடுத்தனர் திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில். சட்ட மறுப்பு இயக்கம் [உப்பு சத்தியாகிரகம்) இன்னும் ஆரம்பமாகவில்லை. தாஸ் எதிர் வழக்காடினார். அவர் தரப்பில் சாக்ஷி சொல்வதற்காக எனக்கு சம்மன் வந்தது. தாஸ்அவர்களுடன் திருநெல்வேலிக்குச் சென்றேன். தாஸ் அவர்களுக்கு வக்கீலாக ஆஜரானார்: தேசீய வீரர் வ.உ.சி. அவரைப்பற்றி கேள்விப்பட்டிருந்தேனேயொழிய நேரில் பார்த்ததில்லை. அன்றுதான் நேரில் பார்த்தேன். கிட்டதட்ட 60 வயதாகியும் அவருடைய வீரம் செறிந்த பேச்சும், சுறுங்கல் விழாத முகப்பொலிவும் அவரை ஓர் இளைஞராகவே மதிக்கச்செய்தது. வ. உ. சி. அவர்களுடன் 2 தினங்கள் தான்பழகும் பாக்கியம் கிடைத்தது. மூன்றும் நாள் மகாத்மா காந்தி ஒத்துழையாமைப் போரை (உப்புசத்தியாக்ரகத்தை) துவங்கிவிட்டதாகவும்டண்டி யாத்திரை புறப்பட்டு விட்டதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்தது. உடனே தாஸ் அவர்களும் எதிர்வழக்காடுவதை நிறுத்திக் கொள்ளவே 1 வருட தண்டனையளிக்கப்பட்டார்.

1935-ம் ஆண்டில், காங்கிரஸ் தலைவராக இருந்த பாபு ராஜேந்திர பிரசாத் தூத்துக்குடிக்கு வந்திருந்தபோது பிள்ளை அவர்கள் நோயுற்றிருப்பதாகக் கேள்விப்பட்டு, அவரது வீட்டுக்குச் சென்றுபார்த்துவந்தார். அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியபோது பாபு ராஜேந்திர பிரசாத் அவர்கள், "**சிதம்பரம் பிள்ளை வாழும் தூத்துக்குடிக்கு வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் சிறை சென்றதாகப் பத்திரிகைகளில் பார்த்து தேசாபி**

மான ஆர்வங்கொண்டவர்களில் நானும் ஒருவன்” என்று கூறினார் என்றால் பிள்ளை அவர்களின் விடுதலை வேட்கைக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

அதோடு வெள்ளை அதிகாரிகளே சிதம்பரம்பிள்ளை அவர்களின் வீராவேச பேச்சைக் கண்டு நடுநடுங்கியிருக்கிறார்கள்.

“பிள்ளையின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால், செத்தபிணம் உயிர்த்தெழும் அடிமைப்பட்ட நாடு ஐந்தேநிமிடங்களில் விடுதலை பெறும் புரட்சி எழும்” என்று வ. உ. சி.யைத் தண்டித்த நீதிபதி பின்ஹேயே கூறினாரென்றால் சிதம்பரனாரின் வீரத்துக்கு வேறு யாருடைய புகழ்ச்சியும் தேவையில்லை அல்லவா?

வ. உ. சி. வெறும் அரசியல் வாதி மட்டுமல்ல; சிறந்த கலைஞருமாவார் தமிழ்ப்பண்டிதரும் கூட. தமிழில் சொற்சுவை நிறைந்த பாக்கள் பல இயற்றியிருக்கிறார்.

இவ்வீரரின், கவிகள் எழுதிய கைகளைத்தான் கல் உடைக்கச் செய்தனர் வெள்ளை அதிகாரிகள். நீதியின் பெயரால் சிறையிலே தள்ளி செக்கிழுக்கச் செய்தனர். அறுசுவை உணவுண்டு அரசர்போல் வாழ்ந்த செல்வச் சீமான் சிதம்பரனாரைக் கேழ்வரகுக் கூழ் குடிக்கச் செய்து கொடுமைப்படுத்தினர்.

வெள்ளையர்கள் சிதம்பரனாரை சிறையிலே தள்ளி இப்படி சித்திரவதை செய்ததற்கு, அவர் செய்த குற்றம் தான் என்ன?

சுதேசி கப்பல் கம்பெனியைத் துவக்கி, ஏகாதிபத்திய கப்பலுக்கு சிதம்பரனார் எதிர் கப்பல் ஓட்டியதும், அதனால் பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார்க்கு அவர்கள் அடித்துவந்த கொள்ளை லாபத்தில் ஏற்பட்ட நஷ்டமும் தான் வெள்ளை முதலாளிகளுக்கு அவர் மேல் ஆத்திரத்தைக்கிளப்பி விட்டது. சுதேசி கப்பல் கம்பெனிக்கு மக்கள் மன உறுதியோடு அளித்து வந்த ஆதரவைக் கண்ட பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியின் முதலாளிகள், சிதம்பரனாரை எப்படியும் அக்கம்பெனியிலிருந்து விலகச் செய்துவிட்டால் அக்கம்பெனிக்கு இருக்கும் மக்களின் ஆதரவு மங்கி மறைந்து விடுமென்றெண்ணினர். சிதம்பரனார் சுதேசி கப்பல் கம்பெனியை விட்டு விலகுவதாய் இருந்தால் ஒரு லட்சம் ரூபாய் தருவதாகச் சொல்லி, அவரை விலகும்படி மன்றாடினர். அவர்கள் வஞ்சக வலையில் சிக்க மறுத்து அவர்களை விரட்டி அடித்தார் வித்தகர் சிதம்பரனார்.

இவ்வகையில் அவரை மடக்க முடியாத வெள்ளையர்

M. KANNAN

Government Approved Fabrcator and Contractor

(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.

★

PLEASE CONTACT US FOR COLLAPSIBLE GATES,
MAIN GATES, WINDOW GRILLS,
VENTILATORS AND ALL OTHER BUILDING MATERIALS

★

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas welding

Stainless Steel, Aluminium Gas cutting works are also undertaken.

Our motto is to satisfy our customers

M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ்

(ஞானம்பிகா பிராண்டு)

ஸ்டீல் டிரங்கு வியாபாரம்
மூர்மார்கெட், சென்னை-3.

(அரசாங்க அங்கீகாரம் பெற்ற பேப்ரிகேட்டர்கள்)

எங்களிடம் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயார் செய்த நல்ல ஸ்டீல் சூட்கேஸ், கேபின், பிலிம் பாக்ஸ், இன்னும் இதர டிசைன்கள் ஆர்டரின் பேரில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

ஞானம்பிகா பிராண்டு ஸ்டீல் டிரங்கு பெட்டிகளை உபயோகியுங்கள்.

பேக்டரி: **நெ. 52 சைடன்ஹாம்ஸ் ரோடு சென்னை-3**
ஷாப்: **நெ. 15-A பிளாக்கு மூர்மார்கெட் சென்னை-3.**

இங்ஙனம்.
M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ் (பார்ட்னர்ஸ்)
M. கோவிந்தசாமி
M. ராதாகிருஷ்ணன்

கள், காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

1908-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ந் தேதி, இந்திய தேசிய காங்கிரஸ் முன்னணித் தலைவர்களில் ஒருவரான விபின சந்திர பாலர் அவர்கள் சிறையிலிருந்து விடுதலைப் பெற்றார். அந்த விடுதலை நாளை திருநெல்வேலி ஜில்லா வெங்கும் சிறப்பாகக் கொண்டாட தேசாபிமான சங்கத்தார் தீர்மானித்திருந்தனர். அந்த நாளில் தூத்துக்குடியில் ஊர்வலமோ பொதுக்கூட்டமோ நடத்தக் கூடாதென்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அத்தடையுத்தரவை மீறி சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவாவும் மாபெரும்ஊர்வலத்தில் கலந்துகொண்டதுடன், பொதுக்கூட்டத்திலும்பேசினர்.

தூத்துக்குடியில் சிதம்பரனாரை கைது செய்ய அஞ்சிய கலெக்டர் விஞ்ச், திருநெல்வேலிக்கு வந்து தன்னைச் சந்திக்கவேண்டுமாய் சொல்ல, அதன்படி அங்கு சென்றபோது சிதம்பரனாரும், சிவாவும் கைது செய்யப்பட்டனர்.

சிதம்பரனாரின் மேல் கலெக்டர் சாட்டிய குற்றங்களில் ஒன்று, சிதம்பரனார் ஒன்றுமறியாத பாமர மக்களை 'வந்தேமாதரம்'என்று, கோஷிக்குமாறு தூண்டினார் என்பது.

இதற்கு வீர சிதம்பரனார், வந்தேமாதரம் என்பதன் பொருள் 'தாய் நாடு வாழ்க' என்பது. 'தாய் நாடு வாழ்க' என்று கோஷிப்பது குற்றமானால் அதை எங்கள் இறுதி மூச்சு இருக்கும்வரை செய்து கொண்டே இருப்போம்" என்று பதில் தந்தார்.

இதைக்கேட்ட கலெக்டர், "இனியும் இப்படிச் செய்தால் உன்னைச் சுட்டுக் கொன்று, உன் நாட்டு மக்களுக்கும் புத்தி புகட்டுவேன்' என்றார்.

இதற்கு சிதம்பரனார், "சுட்டுக்கொல்வதல்ல; சதையைத் துண்டம்துண்டமாக வெட்டி எடுத்து வேதனைப்படுத்தினாலும் எங்கள் முடிவு மாறாது, இதயத்தே வளரும் சுதந்திரப்பற்றும் மாயாது" என்ற வீரவுரை பகன்றார்.

இத்தகைய வீரம் விளைத்த வித்தகனைப் பெற்ற பாரதத்தாய் உண்மையிலேயே பாக்கிய சாலியன்றோ! வாழ்க சிதம்பரனாரின் வீரம்! வளர்க தீரம்மிகு வீரக்காளையரின் திருக்கூட்டம்!

வெளி நாட்டு மூலதனங்களும் நம் நாடும்

R. தனலக்ஷ்மி

இரண்டாவது உலகமகாயுத்தத்தில் வெற்றிதேடிக் கொடுத்ததில் இந்தியாவுக்கு பெருமதிப்பு உண்டு. இதன் காரணமாக நம்நாடு வெளிநாடுகளில் பொருளாதாரத் துறையில் முக்கிய நாடாக (creditor country) திகழ்ந்தது. ஆனால் சமீப காலத்திலிருந்து, இந்த உன்னத நிலைமையை இழந்து, இப்பொழுது மற்ற நாடுகளுக்கு, பொருளாதாரத்துறையில் கடன் கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறது. ரிசர்வ் பாங்க் அதிகாரிகள் வெளியிட்டுள்ள "இந்தியாவின் வெளிநாட்டு மூலதனமும், கடனும்" என்ற புத்தகத்தில், மேற் கூறிய பிற்போக்கு நிலைமையைத் திட்டவட்டமாக வெளியாயிருக்கிறது. கடந்த இரண்டாண்டுகளுக்குள், ரிசர்வ்பாங்க் அதிகாரிகள் மதிப்புப்படி, 1955-ம் ஆண்டுக் கடைசியில், இந்தியாவின் வெளிநாட்டு மூலதனம் (assets) ரூபாய் 1,251.8 கோடிகளாகவும், கடன்கள் ரூபாய் 166.3 கோடிகளாகவும் இருந்தன. இந்தக் கணக்குப்படி 485.5 கோடி இந்தியாவில் லாப மூலதனமாக இருந்தது (creditor position) ஆனால் 1956, 1957ம் ஆண்டுகளில், இந்தியாவின் வெளிநாட்டு லாபமூலதனம் 437.53 கோடி ரூபாயாகக் குறைந்தது. அமெரிக்காவிலிருந்து வாங்கிய ஏராளமான கடன் தொகையும், உலகபாங்கிலிருந்து வாங்கிய கடன் தொகையும் இந்தப்பொருளாதாரப் பிற்போக்கைத் தடுக்க முடியவில்லை. இதன் காரணமாக 1957ம் ஆண்டு முடிவிலிருந்து நம் நாடு வெளி நாடுகளுக்கு கடனாளியாக இருக்கிறது.

1958ம் ஆண்டு, இந்தியாவின் வெளிநாட்டு கடன் தொகை ரூபாய் 178 கோடியாக இருந்தது. இது அரசாங்கத்துறையில் பொதுத்துறையில் 426 கோடி ரூபாய்களாக இருந்தது. அதே சமயத்தில், இந்தியாவின் வெளிநாட்டு மூலதனம் அரசாங்கத்துறையில், 1939 கோடி ரூபாய்களாகவும், பொதுத்துறையில் ரூபாய் 91 கோடியாகவும் இருந்தது. இந்தக் கணக்குப்படி, 1938ல் இந்தியாவின் மூலதனம் ரூபாய்1,504 கோடி ரூபாய்க்கு மேல் வெளிநாட்டில் இருந்தது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 1953ம் ஆண்டு இறுதியில் இந்த லாப மூலதனம் ரூபாய் 557.6 கோடியாகக் குறைந்தது. இதற்குக் காரணம் வெளிநாட்டு அரசாங்க மூலதனத்தில் (Foreign Assets of the official sector) ரூபாய், 206 கோடியும், கடன்தொகையில் ரூபாய் 249 கோடிரூபாய் அதிகமானதும்தான். இந்தக் குறைபாடுள்ளது கையில் நாட்டுப் பிரிவினையினால் பாக்கிஸ்தானத்துக்கு நம்நாடு கொடுத்த 300 கோடி ரூபாயும் இங்கிலாந்துக்கொடுத்து Pensionary Liabilities அடங்கும். பொதுத்துறையில் (non-official sector) கடன் தொகை 476.8 கோடி ரூபாய்களாகப்பெருகியது. இதன் காரணமாக நம் நாட்டின் வெளிநாட்டு மூலதனம் (creditor status) ரூபாய்485.5 கோடி ரூபாய்க் குறைந்தது. இதனால் வெளிநாட்டு தனிப்பட்ட மூலதனம் (Foreign Private Investments) அதிகப்படியாக ஆயிற்று. இதன் காரணமாக வெளிநாட்டு அரசாங்கக்கடனும், லாபமும் 33 அளவுக்கு சரிசமானமாக ஆயிற்று.

1955-ம் ஆண்டு இறுதியில், இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்கள் அரசாங்கக் கணக்கில் (official section) 209 9 கோடிகளாகவும். தனிப்பட்டவர் கணக்கில் 556.4 கோடிகளாகவும் இருந்ததும் லாபக்கணக்கில் அரசாங்கக் கணக்கில் (Assets)ரூபாய்1,170.7கோடிகளாகவும், தனிப்பட்டவர் கணக்கில்சில ரூ 81.1 கோடிகளாகவும் இருந்தது. இந்தக் கணக்குப்படி, அரசாங்கக் கணக்கில் (official sector) நம் நாடு 960.8 கோடி ரூபாய்கள் லாபத்திலும், தனிப்பட்டவர்கள் கணக்கில் 475.3 கோடி ரூபாய்கள் கடனிலும் நின்றது. அரசாங்கத் துறையில் இருந்த லாபம் ஸ்டெர்லிங் கணக்கில் (sterling balances) இருந்தது. கடன்களோ அமெரிக்காவிலிருந்து வாங்கிய கடனையும் (ரூபாய் 91·4 கோடிகள்) மற்ற நாடுகளிலிருந்து வாங்கிய கடனையும் குறிக்கிறது. தனிப்பட்டவர்கள் கணக்கில் லாபத் தொகை இங்கிலாந்திலிருந்தும், பாகிஸ்தானத்திலிருந்தும் கிடைக்கவேண்டியதையும், கடன் தொகை தொழிலில் இட்ட மூலதனத்தையும் (Business Investments)

கடன்களையும் (Loans) இன்ஷியூரன்ஸ் தொகையையும், அட்வான்சையும் (Insurance and Advances) குறிக்கிறது.

இந்தியா, வெளிநாட்டில் பட்டுள்ள கடன் தொகையான 556 கோடிரூபாய்களில், இந்தியாவின் வெளிநாட்டு தொழில் மூலதனங்கள் (Business investments) ரூபாய் 481 கோடிகளாகலாம், மற்ற தொழில் கடன்கள் 41 கோடியாகவும் இருந்தது.

ரிசர்வ் பாங்கார் வெளியிட்டுள்ள தகவலிலிருந்து Plantation Industry யில் மாத்திரம் 4 கோடி ரூபாய் 1954-55ம் ஆண்டில் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற தொழில்களான சணல் (Jute), Coir, Textile, ஆட்டோமபைல்ஸ் (Automobiles), கப்பல் தொழில், புகையிலை சிகரட் முதலியவைகளிலும், உணவுப் பொருள்களிலும், மூலதனம் அதிகமாக ஆயிற்று (Out show). அதே சமயத்தில் மருந்துத் தொழில் (Medcine and Pharmacuticals, Electrical goods, iron and Steel Products, Machinery & Mechine Tools முதலிய தொழில்களிலும், மூலதனம் அதிகமாக ஆயிற்று. பெட்ரோலியம் தொழிலில் மாத்திரம் 27 கோடி ரூபாய் அதிகமாக ஆயிற்று. (கடந்த இரண்டாண்டுக்கள்).

போன வருஷத்திலிருந்து, உற்பத்தியாளர்களுக்கு அதிகப்படியான சலுகைகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சலுகைகள், எவ்வளவு தூரம் நம் நாட்டின் மூலதனத்தை பாதிக்கும் என்பதை அனுபவத்தில் கண்டறிய வேண்டிய விஷயம்.

பார்வையில் தெரிகிறது படத்தின் வெற்றி, சுவீகாரத்தில் சிவாஜி கணேசன்.

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam Street, Madras-3.
Asst. Editor: K. G. Balu.